JAFFNA.

ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

22.10.2014 - மலர் 11, இதழ் 34



இனிய தீபாவளி வாழ்த்துக்கள்




ஐக்கிய நாடுகள் தினம்



சிறுவர் உரிமைக்கு குரல் கொடுத்த நொபெல் வெற்றியாளர்கள்



இலங்கையில் நிறுவப்பட்ட யாப்பஹுவ ராசதானி



மனிதனுக்குப் பதிலாக ரொபோ விமானி



## தேசப்பட வரைகலையில் நவீன தொழில்நுட்பங்கள்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) படத்தை நன்கு அவதானித்து, கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நீர்வாழ் உயிரினங்களின் எண்ணிக்கையை எழுதுக.



கடற்குதிரை - .........

நண்டு - .........

கடல் ஆமை - .........

2) இங்குள்ள நீர்வாழ் உயிரினங்களின் வாழிடம் யாது?

1. ஆறு 2. கடல் 3. மீன்தொட்டி

3) 'கடற்குதிரை' என்பதை பிரித்து எழுதினால்;

1. கடற்+குதிரை 2. கடலின்+குதிரை 3. கடல்+குதிரை




1) இங்குள்ள மரத்தில் எத்தனை பழங்கள் உள்ளன?

.............................................

2) படத்தில் எத்தனை பறவைகள் காணப்படுகின்றன?

.............................................



3) படத்தில் காணப்படும் அம்மாவும் மகனும் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்?

.............................................

4) 'மரம்' என்பதற்கான ஆங்கிலச் சொல் யாது?

.............................................

★ இங்குள்ள மூன்று பூனைக்குட்டிகள் தமக்கு விருப்பமானவற்றைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கின்றன.




3) ஏனைய இரு பூனைக்குட்டிகள் விரும்பும் உணவுகள் எவை?

1. மீன்/முட்டை
2. பால்/இறைச்சி
3. மீன்/எலி

4) நாய்-குரைக்கும் என்பதுபோல; பூனை- .................

1) பால் அருந்த விரும்பும் பூனைக்குட்டி எந்த எழுத்தால் குறிக்கப்பட்டுள்ளது? .................

2) எதையும் உட்கொள்ள விரும்பாத பூனைக்குட்டியின் நிறம் யாது?

1. வெள்ளை 2. கறுப்பு 3. மஞ்சள்



1) பூந்தோட்டத்திலுள்ள பூக்களில் தேன் அருந்துவதற்காக வந்துள்ளவை எவை?

.............................................

2) இங்கு எத்தனை பூக்கள் மலர்ந்துள்ளன?

.............................................

3) 'பூக்கள்' என்பதனை ஒருமையில் தருக.

.............................................

4) பூக்கள் மற்றும் இலைகளின் எண்ணிக்கையில், கூடுதலாக இருப்பது எது?

.............................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652



# மனித விமானிக்குப் பதிலாக ரொபோ விமானி




*அமெரிக்க கடற்படை மற்றும் விமானப் படைகள் தமது எதிர்கால விமானங்களில், மனித விமானிகளுக்குப் பதிலாக ரொபோ விமானிகளைப் பயன்படுத்த திட்டமிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.*

எதிர்காலத்தில் அமெரிக்க கடற்படையின் பயன்பாட்டுக்கென வடிவமைக்கப்பட்டு வருகின்ற F/A - XX ரக போர் விமானத்திலும் அமெரிக்க விமானப் படையின் பயன்பாட்டுக்கென வடிவமைக்கப்பட்டு வருகின்ற F-X ரக போர் விமானங்களிலும் 2030 ஆம் ஆண்டளவில் இந்த ரொபோ தொழில்நுட்பம் முற்றிலும் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்காலத்தில் போர் விமானங்களில் செயற்கை அறிவுடன்கூடிய ரொபோ விமானி ஒருவர் இருப்பார். அந்த ரொபோ விமானியை, குறித்த போர் விமானத்திலுள்ள தரவுகளை பகுத்தாராய்ந்து செயல்படவும், போர்க் கப்பலை நோக்கி குறித்த விமானத்தை தாழ்த்தவும் போர்க் கப்பலிலிருந்து அதனை உயர்த்தவும் பயன்படுத்திக்கொள்ள அமெரிக்க பாதுகாப்புத் தரப்பு எதிர்பார்த்துள்ளது.

அமெரிக்க கடற்படை பயிற்சி நிறுவனம் அண்மையில் தயாரித்த போயிங் F/A - 18E/F சுப்பர் ஹோர்னட் விமானத்திலும், லொக்ஹீட் மாட்டின் F - 22 ரெப்டர் விமானத்திலும் இந்த ரொபோ விமானியைப் பயன்படுத்த தற்போதளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க கடற்படையின் பயிற்சி நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற, பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில்; "போர் விமானங்களில் ரொபோ விமானிகளைப் பயன்படுத்துவதானது, அமெரிக்க ராணுவத்தினுள் பாரியதொரு மாற்றம் ஏற்படுத்தப்படப் போவதை உறுதிப்படுத்துகின்றது" என்றார்.



## ரொபோ விமானியின் இயக்கத்திலான பரீட்சார்த்த நடவடிக்கை

அண்மையில் ரொபோ விமானியுடனான பரீட்சார்த்த பயணமொன்றை மேற்கொண்ட அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான X - 47B எனும் ட்ரோன் விமானம், வெற்றிகரமாக தரையிறங்கியமையானது, ரொபோ விமானிகளைப் பயன்படுத்துவதன் சாதகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான நல்லதோர் உதாரணமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ரொபோ விமானத் திட்டத்தை மேற்கொள்ளும் பொருட்டு, அமெரிக்காவின் சிலிகன்வெலி கணினி நிபுணர்களின் உதவியைப் பெறுவதற்காக இப்பொழுதே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

-விபாகர்

## புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் புகைப்படம்


**2014, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் புகைப்படங்களை 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிக்க விரும்புகிறீர்களா?**

அப்படியாயின்,

- சித்தியடைந்த மாணவரின் புகைப்படம், பெற்ற புள்ளிகள், பாடசாலை, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் என்பனவற்றை ஒரு தாளில் தெளிவாக எழுதி, பெற்றோர் கையொப்பம், பாடசாலை அதிபரின் கையொப்பம் மற்றும் அத்தாட்சி முத்திரையுடன் உறுதிப்படுத்தி இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.
- புள்ளிகளைக் காட்டும் அத்தாட்சிப் பிரதியும் இணைக்கப்படுவது விரும்பத்தக்கது.
- குழுப்படம் அனுப்புபவர்களாயின், தனிப்படம் அனுப்புவதை தவிர்க்கவும்.
- *2014 நொவெம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.*

அனுப்ப வேண்டிய முகவரி:

புலமைப்பரிசில்
சித்தியடைந்தோர் 2014
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.

தமிழ் FM வானொலியில்
வார நாட்களில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை
'ஆறாம் அறிவு' நிகழ்ச்சி கேளுங்கள்...
விஜய் சந்தா பரிசைப் பெறுங்கள்...!

தகவல்கள், விஞ்ஞான விளக்கங்கள், கேள்விகள்,
கணிதப் புதிர்கள் - இன்னும் பல சுவையான
அம்சங்களோடு - ஆறாம் அறிவு!
தமிழ் FM ▶ வன்னி 99.5 FM, யாழ்ப்பாணம் 99.7 FM
நாடு முழுவதும் 107.8 FM
இணையத்தில்: www.tamilfm.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அக்பர் பீர்பால் கதைகள்

# அபசகுணம்

அக்பர் தினமும் தூங்கி எழுந்தவுடன் அவர் எதிரில் உள்ள ஜன்னலினால் வெளித் திடலைப் பார்ப்பார். அப்போதுதான் அந்நாள் மிகவும் அதிர்ஷ்டமான நாள் என்பது அவரது நம்பிக்கையாகும். ஒருநாள் அவர் கண் விழிக்கும் போது சிப்பாய் ஒருவர் அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்தார். அன்று முழுவதும் அக்பருக்கு சில பிரச்சினைகள் வந்தன. அனைத்தும் அந்த சிப்பாய் முகத்தில் விழித்ததால்தான் என்று நினைத்து அந்த சிப்பாயை தூக்கில் போட உத்தரவிட்டார்.

இந்த விடயம் பீர்பாலுக்குத் தெரிய வந்தது. பீர்பால் மன்னரிடம், சென்று ''ஏன் அவரை தூக்கிலிடப்போகிறீர்கள்?'' என்று கோபமாகக் கேட்டார். அதற்கு அக்பர், ''இன்று இவனுடைய முகத்தில் நான் விழித்ததால் எனக்கு ஏகப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டன. இவனுடைய முகம் அபசகுனமானது'' என்று கூறினார்.

அதற்கு பீர்பால் பயங்கரமாகச் சிரித்தார். ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று அக்பர் கோபமாக பீர்பாலைப் பார்த்துக் கேட்டார். அதற்கு பீர்பால் ''நீங்கள் அவனுடைய முகத்தில் விழித்ததால் உங்களுக்குப் பிரச்சினைகள் மட்டும்தான் வந்தன. ஆனால், அவன் உங்கள் முகத்தில் விழித்ததால் அவனுடைய உயிரே போகப்போகிறதே, இப்போது யாருடைய முகம் அபசகுனமானது என்று நினைத்துச் சிரித்தேன்'' என்றார். அக்பர் தனது பிழையை உணர்ந்து சிப்பாயை விடுதலை செய்தார்.





# ஞான பண்டிதர்

சிம்மியபுர நாட்டில் கற்றறிந்த பண்டிதர் ஒருவர் இருந்தார். அவர் தனக்கு நிகர் யாருமில்லை என்ற கர்வமுடையவர். அத்துடன், படிப்பறிவில்லாதவர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. ஒருநாள் அவர் ஓர் ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் செல்ல வேண்டியிருந்தது. பரிசலில் போவதைத்தவிர வேறு வழிகள் இருக்கவில்லை.

பரிசல் ஒட்டுபவன் ஓர் ஏழை. பார்ப்பதற்கு மிகச் சாதாரணமாக இருந்தான். அவன் படிப்பறிவில்லாதவன் என்பது அவன் பேச்சிலேயே தெரிந்தது. பண்டிதருக்கு அவனை விட்டால் வேறு வழி தெரியாததால் ''அக்கரையில் உள்ள ஊரில் விட்டு விடப்பா'' என்று கூறிப் பரிசலில் ஏறிக்கொண்டார். பரிசலும் ஆற்றில் செல்ல ஆரம்பித்தது. பரிசல் ஓட்டுபவன் மௌனமாகப் பரிசலை செலுத்திக்கொண்டிருந்தான்.

ஆனால், பண்டிதருக்குச் சும்மாயிருக்க முடியவில்லை. பரிசல்காரனைப் பார்த்து ''நீ வேதம் படித்திருக்கிறாயா?'' என்று கேட்டார். ''அப்படின்னா என்ன சாமி?'' என்று பரிசல்காரன் திருப்பிக் கேட்டான்.

''வேதம் படிக்காதவன் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா?'' என்று பண்டிதர் கிண்டலாகக் கேட்டார். பின்னர், ''சரி உனக்கு கீதை தெரியுமா?'' என்றார். பரிசல்காரன் விழித்தான்.

''என்னப்பா உன் வாழ்க்கை? கீதைகூடப் படிக்காமல் நீ என்னத்தைச் சாதிக்கப் போகிறாய்?'' என்று மறுபடியும் பரிகசித்தார். இன்னும் சிறிது தூரம் பரிசல் ஆற்றில் சென்றது. உனக்கு ''ராமாயணம், மஹாபாரதம் கதையாவது தெரியுமா?'' என்று அவனை மறுபடியும் பண்டிதர் வம்புக்கு இழுத்தார். அவன் பொறுமையாக ''சாமி, நமக்கு இந்தப் பரிசலை ஒட்டுவதைத் தவிர, வேறு எதுவும் தெரியாதுங்க!'' என்று பதில் சொன்னான்.

''இப்படிப் படிப்பறிவே இல்லாமல் இருக்கிறாயே. நீ வாழ்ந்து என்ன பயன்?'' என்று அவனை இகழ்ந்தார். இதற்குள் பரிசல் ஆற்றின் நடுவே வந்துவிட்டது. திடீரென ஆற்றின் வேகம் அதிகரித்ததால் பரிசல் தத்தளிக்க ஆரம்பித்தது.

பரிசல்காரன் பண்டிதரைப் பார்த்து ''சாமி! உங்களுக்கு நீச்சல் தெரியுமா?'' என்று கேட்டான். பண்டிதர் ''தெரியாதே! ஏனப்பா?'' என்று கேட்டார். பரிசல்காரன் ''ஏன் சாமி? இவ்வளவு படிச்சிருக்கீங்களே! உங்களுக்கு நீச்சல் தெரியலையே! இப்ப வெள்ளம் வந்தால். பரிசல் தாங்காது. நீந்த முடியாவிட்டால் வாழ்க்கைக்கே ஆபத்தாச்சே!'' என்று கூறிவிட்டு ஆற்றில் குதித்து நீந்தத் தொடங்கினான் பரிசல்காரன். பண்டிதர் திரு திருவென விழிக்க ஆரம்பித்தார்.



# முரட்டு ஆடு

அது ஒரு மலையடிவாரம். அதன் அருகே அழகிய ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த மலையடிவாரத்தில் பச்சைப் பசேல் என்று புற்கள் வளர்ந்திருந்தன. மலையடிவாரத்தின் மேலே ஆங்காங்கே காணப்படும் சமபரப்புப் பகுதியில் சின்னஞ்சிறு வீடுகள் இருந்தன. அங்கு வாழும் மக்கள் தங்களது பிழைப்புக்காக ஆடு, மாடு மேலும் பிற கால்நடைகளையும் வளர்த்து வந்தனர்.

அவர்கள் வளர்க்கும் ஆடுகள் மலையடிவாரத்தில் வளர்ந்துள்ள புற்களை மேய அங்கே வரும். அவற்றில் ஒரு முரட்டு ஆடு இருந்தது. அதன் உடல் பருத்து, கொம்புகள் இரண்டும் வளர்ந்து முறுக்கிக்கொண்டு நின்றன. அதைப் பார்த்து ஏனைய ஆடுகள் பயந்து ஒதுங்கிப் போய்விடும். அதனால், அந்த முரட்டு ஆட்டுக்கு திமிர் வந்துவிட்டது. அது மேய்ந்துகொண்டிருக்கும் இடத்தின் அருகே வேறு ஆடுகள் வந்துவிட்டால் அவற்றை முட்டி தூர விரட்டிவிடும்.

ஒருநாள் ஆற்றின் கரையோரம் மேய்ந்துகொண்டிருந்த ஆடு ஒன்று ஆற்றினோரம் வந்த முதலையைப் பார்த்துவிட்டுப் பயந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி அந்த முரட்டு ஆடு மேய்ந்துகொண்டிருந்த இடத்தின் அருகே வந்தது.

அதைப் பார்த்த முரட்டு ஆடு ஓடி வந்த ஆட்டைப் பார்த்து, ''நான் மேய்ந்து கொண்டிருக்கும் இடத்திற்கு நீ எப்படி வரலாம்'' என்று கோபமாகக் கேட்டது. அதற்கு அந்த ஆடு, ''நான் ஆற்றின் அருகே முதலையைப் பார்த்தேன். அதனால் வேகமாக இங்கு ஓடி வந்துவிட்டேன்'' என்று அமைதியாகச் சொன்னது. ஆனால், முரட்டு ஆடோ அது சொன்னதை சிறிதும் கேட்காமல் ஓடி வந்து அந்த ஆட்டுடன் சண்டைபோட ஆரம்பித்தது. அந்த ஆடோ சண்டை போட விரும்பாமல் சமாதானமாகவே பேசியது. முரட்டு ஆடோ, அது சொன்னதைக் கேட்கவில்லை. வேறு வழியின்றி அந்த ஆடு முரட்டு ஆட்டுடன் எதிர்த்து நின்று ஆக்ரோஷமாக சண்டையிட்டது.

மலைச் சரிவான பகுதியில் இரண்டு ஆடுகளும் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் பொழுது முரட்டு ஆட்டின் கால் சறுக்கி மலையடிவாரத்தில் உருண்டுபோய் ஆற்றில் விழுந்துவிட்டது. அங்கே ஆற்றின் கரையோரம் வாயைப் பிளந்துகொண்டு காத்திருந்த முதலை அந்த முரட்டு ஆட்டை கௌவிக்கொண்டு ஆற்றினுள்ளே சென்று மறைந்தது.

நானே பெரியவன் என்ற மமதை ஏற்பட்டால் இதுதான் கதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அஞ்ஞானம் எனும் அக இருளை அகற்றி, மெய்ஞ்ஞானம் எனும் ஒளி பிறப்பதை உணர்த்தும் தீபாவளி, ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் கொண்டாடப்படுகின்றது. அந்தவகையில், இவ்வருடம் ஐப்பசி மாதமான ஒக்டோபர் 22 ஆம் திகதி தீபாவளித் திருநாள் கொண்டாடப்படுகின்றது.

# அஞ்ஞானத்தை அகற்றி, மெய்ஞ்ஞானத்தை அளிக்கும் தீபாவளி



இரு நபர்களுக்கிடையில் மத்தியஸ்தம் செய்பவர் அதாவது, பிரச்சினைக்கு தீர்வு சொல்பவர் தராசு போன்று நடுநிலையானவ ராக இருக்கவேண்டும் என்று கூறுவார்கள். இத் தராசுக்கு 'துலாக்கோல்' என்ற இன்னுமொரு பெயரும் உள்ளது. அந்த வகையில், தீபாவளி கொண்டாடப்படும் ஐப்பசி மாதம் துலா மாதம் என்றும் அழைக்கப்படுகின்றது. தராசு எவ்வாறு நடுநிலையாக தன் முள்ளைக் காட்டி நிற்கின்றதோ, அதேபோன்று தனக்கு வேண்டிய வர், வேண்டாதவர் என்ற பேத மின்றி தீர்ப்புக் கூறுபவர் யாரோ அவரே மிகச் சிறந்த நீதிமான் ஆவார். அதனாலேயே நீதிமன்றங் களில், நீதியின் சின்னமாக தராசை வைத்திருக்கிறார்கள். அவ்வாறே, தீபாவளி நன்னாள் உயரிய நீதியை எடுத்துச் சொல்கின்றது.

பல அட்டகாசங் களையும் அநியா யங்களையும் செய்த நரகா சுரனை, பெற்ற மகன் என்றும் பாரா மல் திருமாலும், சத்தியபாமாவும் இணைந்து வதம் செய் தனர். இந்த நீதியும், மன உறுதியும் அனை வரிடமும் ஏற்பட வேண்டும் என்பதே தீபாவளித் திருநாள் எமக்கு உணர்த்தும் தத்துவமாகும்.

திருமாலுக்கும் பூமாதேவிக்கும் பிறந்த நரகாசுரனின் இயற் பெயர் பவுமன், அசுர வதத்தின்போது பிறந்த வன் என்பதால், அசுர சுபாவம் இவனிடம் இயல்பாகவே அமைந்துவிட்டது. நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்தமையால் இவன் 'நரக அசுரன்' எனப்பட்டான். அப்பெயரே 'நரகாசுரன்' என்று வரலாயிற்று.

ஆண்டு முழுவதும் பல பண்டிகைக் கொண்டாட்டங்கள் வந்தாலும் தீபாவளிக்கென தனிச் சிறப்பு உள்ளது. தீபாவளி நன்னா ளில் நீர்நிலைகளில் கங்கையும், புத்தாடை, அணிமணிகளில் மகா விஷ்ணுவும், தீபாவளி மருந்தில் தனவந்திரியும் உறைந்துள்ளனர். இனிப்புப் பலகாரங்களில் அமிர்த மும் மலர்களில் யோகினிகளும் வசிக்கின்றனர். தீபத்தின் சுடரில் பரமாத்மாவும், பட்டாசுகளின் தீப்பொறியில் ஜீவாத்மாவும் தோன்றுகிறார்கள். எனவேதான், தீபாவளித் திருநாளில் அனைத்து தெய்வங்களின் அருளையும் பெறும் விதமாக, ஏழை, பணக்கா ரர் என்ற பாகுபாடு இன்றி அனைவரும் எண்ணெய் தேய்த்து நீராடி, புத்தாடை அணிந்து, மலர் களால் இறைவனை அலங்கரித்து, தீபங்கள் ஏற்றிவைத்து வழிபட்டு, பலகாரங்களை நிவேதனம் செய்து உண்டு, பட்டாசுகள் வெடித்துக் கொண்டாடுகின்றனர். தீபாவளி கொண்டாட இயலாதபடி வறுமையில் உள்ளவர்களுக்கு, அதனைக் கொண்டாட உதவு வது, கோடானகோடி தான பலன்களுக்கு ஈடானது!

## தீபாவளியின் முக்கியத்துவம்

தீபாவளித் திருநாள் பெண் களின் முக்கியத்துவத்தையும், அவர்களைப் புறக்கணித்து நாம் பயனடைய முடியாது என்பதை யும் உணர்த்தி ஆண், பெண் சமத்துவத்தைக் கொண்டாடும் திருநாளாகவும் கொண்டாடப்படு கின்றது. தீபம் என்பது ஒளி விளக்கு; ஆவளி என்பது வரிசை. தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து, அறியாமை என்னும் இருள் விலகி, ஞானம் என்னும் ஒளி ஏற்படவேண்டும் என்று வேண்டிக் கொண்டாடும் திருநாள் தீபாவளித் திருநாளாகும். அந்தவகையில், அனைத்து மக்களும் எவ்வித பேதமுமின்றி கொண்டாடி மகிழ்கின்ற, மகிழக் கூடிய இனிய திருநாளாக தீபாவ ளித் திருநாள் அமைகின்றது.

**அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் வாழ்த்துக்கள்**





## தீபாவளி கொண்டாட்டத்திற்கான வேறு பல காரணிகள்


- திருப்பாற்கடலை அமிர்தம் பெறுவதற்காக கடைந்த பொழுது திருப்பாற்கடலில் இருந்து லக்ஷ்மி தோன்றிய அந்த நன்னாள் தீபாவளித் திருநாள் என்றும் கூறப்படுகின்றது.
- பாண்டவர்கள் வனவாசம் முடிந்து பாரத யுத்தத்தில் வெற்றிபெற்று மீண்டும் அஸ்தினாபுரத்தை அடைந்த நாள் தீபாவளி எனவும் கருதப்படுகின்றது.
- விக்கிரமாதித்த மகாராஜா முடிசூடிய நாள் தீபாவளி என்றும் கருதப்படுகின்றது.
- 14 வருட வனவாசத்திலிருந்து இராமர் அயோத்திக்கு திரும்பிய நாளை அயோத்தி மக்கள் வீடுதோறும் விளக்கேற்றி தீபாவளியாக கொண்டாடினர் எனவும் நம்பப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தேசப்பட
# நவீன தொ



தற்போதைய காலகட்டத்தில் தேசப்படத்திற்கென பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பங்களான புவியியல் தகவல் முறைமை (GIS), செய்மதி தொழிநுட்பம் (RS), புவியியல் சார் அமைவிட முறைமை (GPS) ஆகிய தொழில்நுட்ப படவரைகலை முறைகள் பிரசித்தி பெற்றுக் காணப்படுகின்றன. இம்மூன்று முறைமைகளும் இன்றைய தேசப்பட வரைகலையியலில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தி வருகின்றன. அத்துடன், இத்தொழில்நுட்பங்கள் புவி மேற்பரப்பு அம்சங்களை மிகத் துல்லியமாக ஆராய்ந்து பல்வேறு பயன்பாடுகளை ஏற்படுத்தி வருகின்றன. அவை பற்றிய சில விபரங்கள் வருமாறு:

## புவியியல் தகவல் முறைமை - GIS

புவியியல் சார்பான விடயங்களை சேகரித்தல், சேமித்தல், பகுப்பாய்வு செய்தல், பரப்புதல் போன்றவற்றிற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட வன்பொருள், மென்பொருள் ஆகியவற்றின் ஊடாக தரவுகளை உள்நுழைத்து அதனுடன் தொடர்பான மக்கள், நிறுவனங்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புகள் அனைத்தையும் கொண்ட ஒரு தொகுதி புவியியல் தகவல் முறைமை (Geographic Information Systems) எனப்படுகின்றது.




## புவியியல் தகவல் முறைமையின் தொகுதிகள்

**புவியியல்:** பூமி பற்றிய கற்கைநெறி புவியியல் ஆகும். அதாவது, புவி மேற்பரப்பு பற்றிய ஆய்வு எனப்படுகின்றது. இது ஒரு கிரேக்க சொல்லாகும்.

**தகவல்:** தரவுகளிலிருந்து பெறப்பட்ட அல்லது கண்டுபிடிக்கப்பட்ட செய்திகள் மற்றும் உண்மைகள் தகவல்கள் ஆகும்.

**முறைமை:** நுண் தொழில்நுட்பம் (Micro Electronic) வன்பொருள், மென்பொருள் இவை அனைத்தையும் கொண்ட தொகுதி.

## புவியியல் தகவல் முறைமையின் கூறுகள்

1. Hardware- வன்பொருள்
2. Sofware- மென்பொருள்
3. People- மக்கள்
4. Methods- முறை
5. Data- தரவு

## புவியியல் தகவல் முறைமையின் வரலாறு

புவியியல் தகவல் முறைமையானது, முதல் தடவையாக 1965 ஆம் ஆண்டு North Western பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் Michal Dacy, Dvance Marble என்பவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. 1960 ஆம் ஆண்டளவில் கணினியின் உதவி கொண்டு GIS பயன்படுத்தப்பட ஆரம்பித்தாலும், அது 100 வருடங்கள் பழமை வாய்ந்தது. இதன் ஆரம்ப அபிவிருத்தி வட அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது. உலகில் ஏனைய நாடுகள் GIS தொழில்நுட்ப முறையினை அறிந்திருந்தாலும், அண்மைக்காலத்தில் இதன் முக்கியத்துவம் வெகுவாக உணரப்பட்டு பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும்கூட தற்பொழுது கல்வி, பொருளாதார, இயற்கை வள மேம்பாட்டுத் திட்டங்களில் GIS தொழில்நுட்ப முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## GIS இன் வளர்ச்சி

✱ 1960 களின் முற்பகுதியில் அணுஆயுத ஆராய்ச்சி உத்வேகம் பெற்றமையால் ஏற்பட்ட கணினி வன்பொருள் வளர்ச்சிகள் படவரைகலையியலின் வளர்ச்சிக்கு வித்திட்டது எனலாம்.

✱ 1960 ஆம் ஆண்டில் கெனடாவின் காடு மற்றும் கிராம அபிவிருத்தி திணைக்களம், முதன்முதலாக GIS தொழில்நுட்பத்தை செயற்படுத்திக் காட்டியது.

✱ இந்த GIS நுட்பமானது, கெனடா புவியியல் தொகுதி (Canada Geographic Information System - CGIS) என அழைக்கப ட இதனை கலாநிதி நொஜர் டொம்லின்சன் என்பவரே உருவாக்கினார்.

✱ 1964 ஆம் ஆண்டில் ஹோவர்ட் டிஃபிஷர் என்பவர்



கணினி வரைகலை மற்றும் இடம்சார்ந்த பகுப்பாய்வுகளுக்கான ஆய்வுகூடமொன்றை ஆரம்பித்தார்.

✱ 1977 இல் மேற்கத்தேய சக்தி மற்றும் நிலப்பயன்பாட்டு குழுவினதும் அமெரிக்காவின் மீன் மற்றும் வனவிலங்கு சேவை அமைப்பினதும் மேற்பார்வையில் ஃபோர்ட் கொலின்ஸ் எனுமிடத்தில் வரைபட மேற்பரப்பு மற்றும் புள்ளியல் தொகுதி (The Map Overlay and Statistical System MOSS) செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

✱ 1981 களில் அமெரிக்காவின் ESRI என்னும் நிறுவனம் அனைத்துத் துறைகளிலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வரைகலையில்
# ழில்நுட்பங்கள்

பயன்படுத்தக்கூடியளவிற்கு GIS மென்பொருட்களை வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

✱ 1982 இல் ஐக்கிய அமெரிக்காவின் பொறியியல் ஆராய்ச்சி ஆய்வு கூட ராணுவத்துறையானது, நிலமுகாமைத்துவம் மற்றும் சூழல் திட்டமிடல் என்பவற்றுக்காக GRASS GIS எனும் மென்பொருளை தயாரித்தது.

1987 இல் முதன்முதலாக ESRI நிறுவனமானது, ARC INFO எனும் மென்பொருளை வெளியிட்டது.

✱ GIS தினமானது, வருடத்தில் நொவெம்பர் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் கொண்டாடப்படுகின்றது.



## புவியியல் தகவல் முறைமையின் பயன்பாடுகள்

- பட வரை கலையியல்
- தகவல் முகாமைத்துவம்
- தொலைத்தொடர்பாடல்
- புவி மேற்பரப்பு கணக்கியல்
- சூழல் பகுப்பாய்வு
- அடிப்படை வசதிகள் முகாமைத்துவம்
- நில அளவை திட்டமிடல்
- விவசாயம்
- மண்ணியல்
- உலக அபிவிருத்தி
- இயற்கை வள அபிவிருத்தி

## புவியியல் தகவல் முறைமை பயன்பாட்டாளர்கள்

- ஆராய்ச்சியாளர்கள்
- செயற்றிட்ட அமைப்புக்கள்
- மாணவர்கள்
- வியாபார ஒருங்கிணைப்பாளர்கள்
- அரசாங்கம் அல்லது நிறுவனங்கள்
- சூழலியலாளர்கள்
- சூழல் பாதுகாப்பாளர்கள்

## செய்மதி தொழில்நுட்பம் - RS

ஒரு பொருளை அல்லது ஒரு நிகழ்ச்சியை அல்லது ஒரு மேற்பரப்பைப் பற்றிய விபரங்களை எவ்வித நேரடித் தொடர்புமின்றி தொலைவிலிருந்து அவதானிக்கும் ஒரு செயன்முறை செய்மதி தொழில்நுட்பம் (Remote Sensing) ஆகும். இதன் அடிப்படையில் விண்வெளி ஆராய்ச்சிகள், செய்மதிகளின் உதவி கொண்டு பூமி மற்றும் ஏனைய கிரகங்களில் உள்ள விபரங்களை ஆராய்ச்சி செய்கின்றன.

## செய்மதி தொழில்நுட்பத்தின் பயன்பாடு

- சூழல் முகாமைத்துவம்
- இயற்கை வள முகாமைத்துவம்
- பட உருவாக்கம் (தேசப்படம்)
- தொலைத்தொடர்பு
- ராணுவ பயன்பாடு
- வளிமண்டலவியல் பயன்பாடு
- கடற்பிரயாணம்
- விவசாயம்

## புவியியல் சார் அமைவிட முறைமை - GPS

ஒரு பிரதேசத்திலிருந்து, அந்த பிரதேசம் எந்த இடத்தில் அமைந்துள்ளது. அதன் அகலாங்கு, நெட்டாங்கு என்பவற்றின் அடிப்படையில் பிரதேசங்களின் அமைவிடங்களை காட்டக்கூடிய கருவியாகும். 1973களின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்பு திணைக்களத்தினால் GPS (Global Positioning System) தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது.GPS தொழில்நுட்பம் விமானம், கப்பல், தரை வாகனங்களுக்கு வழிகாட்டுவதற்காக பெரிதும் பயன்படுகின்றது.இத்தொழில்நுட்பம் 24 மணித்தியாலமும் செய்மதிகளுடன் தொடர்புபட்டுள்ளது.

## GIS, RS, GPS என்பவற்றுக்கிடையிலான தொடர்புகள்

✱ GIS, RS, GPS ஆகிய 3 தொழில்நுட்பங்களினூடாக தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் தளமாக புவி மேற்பரப்பு காணப்படுகின்றது.

✱ இம் மூன்று தொழில்நுட்பங்களும் தரவுகளை சேகரிக்கும்பொழுது இடம்சார், இடம்சாரா தரவுகளையே சேகரிக்கின்றன.

✱ இந்த தொழில்நுட்பங்கள் வன்பொருள், மென்பொருட்களையே பயன்படுத்துகின்றன.

✱ புவி மேற்பரப்பு சம்பந்தமான தகவல்களையும் உடனுக்குடன் அனுப்பிக்கொண்டிருக்கின்றன.

✱ இத்தொழில்நுட்பங்கள் இடத்தை அறிதல், நிலைமையைக் கண்டறிதல், குறித்த காலத்தில் நிகழும் மாற்றங்கள், மாதிரியைக் கண்டுபிடித்தல் என்பவற்றில் தொடர்புபடுகின்றன.

எச்.எஃப்.நிரோஸா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

பெயர்: .......................................................

01) பின்வரும் பாடலைப் படித்து அதற்கமைய கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே
பாசிப்பயறு வறுத்துக் குற்றி செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாள்
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்துடுமே

1. தோழர்கள் ஆனந்தப்படுவதற்கான காரணம் யாது?
.......................................................
2. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதம் யாது?
.......................................................
3. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தானிய வகை யாது?
.......................................................
4. படர்க்கை பெண்பால் ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று தருக.
.......................................................
5. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச்சொல் தருக.
i. நண்பர்கள் - .............................................
ii. ஆனந்தம் - .............................................
6. எதிர்கால வினைச்சொல் யாது? .............................................

02) ஒத்தகருத்துள்ள சொல்லின்கீழ் கீறிடுக.

| | | | |
|---|---|---|---|
| 01. பகல் | 1. மேதினி | 2. தினம் | 3. நண்பகல் |
| 02. ஆரணியம் | 1. வனம் | 2. நந்தவனம் | 3. சூழல் |
| 03. ஈகை | 1. தருமம் | 2. கொடை | 3. தானம் |
| 04. இறைவன் | 1. அருள் | 2. ஈசன் | 3. கடவுள் |
| 05. தோழி | 1. சிநேகிதி | 2. அழகி | 3. பாதகி |

03) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.

01. தினை+அளவு = .............................................
02. நன்று+அன்று = .............................................
03. யானை+கால் = .............................................
04. நோய்+அற்ற = .............................................
05. பயன்+அளிக்கவில்லை = .............................................

04) அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. | பாடினேன் | .................... | .................... |
| 2. | .................... | ஓடுகின்றாய் | .................... |
| 3. | .................... | .................... | பாடுவான் |
| 4. | .................... | விளையாடுகின்றாய் | .................... |
| 5. | உண்டாள் | .................... | .................... |

05) பின்வரும் மரபுத்தொடரை வைத்து வாக்கியம் அமைக்க.

1. புண்படுத்தல் - .............................................
2. உச்சிகுளிர்தல் - .............................................
3. அறைகூவல் - .............................................




06) பின்வரும் தொடர்மொழிக்கு தனிமொழி தருக.

1. தாய் தந்தையரை இழந்தவன் -
.............................................
2. வீண் செலவு செய்பவன் -
.............................................
3. முனிவர்கள் வாழுமிடம் -
.............................................
4. விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது -
.............................................
5. கடவுள் இல்லை என்பவன் -
.............................................

07) பின்வரும் சொற்கள் தவறானவை. அவற்றைத் திருத்தி எழுதுக.

1. பள்ளிக் கூடம் - .............................................
2. சொல்லுறன் - .............................................
3. பராயத்தில் - .............................................
4. அழுறாய் - .............................................
5. வருகுது - .............................................

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

## புலமைப்பரிசில் விடைகள்

(ஒக்டோபர் 15 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

### சுற்றாடல்

01)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 3 | 04. 3 | 07. 1 | 10. 3 | 13. 1 |
| 02. 2 | 05. 2 | 08. 1 | 11. 2 | 14. 3 |
| 03. 1 | 06. 1 | 09. 3 | 12. 2 | 15. 1 |

02)

| | | | |
|---|---|---|---|
| 1. (✓) | 3. (✓) | 5. (✕) | 7. (✕) |
| 2. (✕) | 4. (✓) | 6. (✕) | |

03) 01. கடுபுல்/ கொடி மல்லிகை/ வாடா மல்லிகை
02. மா, அன்னமுன்னா, பலா
03. அந்தூரியம், ஓர்கிட், கார்னேசன்
04. அணில், எலி
05. கைவாள்/ வாள்
06. வெண்கட்டி/ எண்சட்டம்/ விஞ்ஞான உபகரணம்/ விளையாட்டு உபகரணம்

07. ❋ தேவையான சக்தி கிடைக்கும்.
❋ உடல் தொழிற்பாடு சீராக நடைபெறும்.
❋ தேவையான போசணைக்கூறுகள் கிடைக்கும்.

08. கொழும்பு/மட்டக்குளி

09. செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, காவி நிறம்

10. ❋ புகையிரத கடவை ❋ பாம்புப் புற்று ❋ நீர்ச்சுழியுள்ள ஆறு
❋ கிணற்றடி (சத்தமற்ற) ❋ மண்சரிவுள்ள இடம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# பத்திரிகைகளில் வாசகர்களின் பங்களிப்பு







பத்திரிகைத்துறையில் ஈடுபடுவோரை ஊடகவியலாளர் அல்லது பத்திரிகையாளர் என்று குறிப்பிடுகின்றோம். அதேவேளை, இந்த பத்திரிகைகளில் வாசகர்களின் பங்களிப்பு எந்தளவில் இருக்கும் என்ற கேள்வி எழலாம். உண்மையில் வாசகர்கள் வெறுமனே வாசகர்கள் என்ற மட்டத்தில்தான் இருக்க வேண்டியவர்களா? அப்படி அல்ல... பத்திரிகையில் வாசகர்களின் பங்களிப்புக்கள் உள்ள சந்தர்ப்பங்களும் இருக்கவே செய்கின்றன. சமூகம் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளை பத்திரிகை நிருபர்கள் மட்டுமன்றி, பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்ற மக்களும் அல்லது அதனை பார்வையுறுகின்றவர்களும்கூட பத்திரிகைகள் ஊடாக அவற்றை பகிரங்கப்படுத்தக்கூடிய வகையிலேயே பத்திரிகைத்துறை கட்டமைப்புக்கள் உள்ளன.

வாசகர் மேடை, மக்கள் பார்வை போன்ற தலைப்புக்களில் சிறப்புப் பகுதிகளை பத்திரிகைகள் ஒதுக்குவதுண்டு. இதில் வாசகர்கள் தாம் சார்ந்த சமூகம் தொடர்பான பல விடயங்களை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அரச நிர்வாகம் சார்ந்த பல பிரச்சினைகள் மக்களுக்கு இருக்கலாம். ஆனால், அவற்றிற்கு யாரிடம் எவ்வாறு தீர்வுகளை பெறுவது என்று தெரியாத நிலையில் இருப்பர். இப்படியான சந்தர்ப்பங்களில் தமது கருத்துக்களை பத்திரிகைகள் ஊடாக முன்வைப்பதன்மூலம் குறித்த பத்திரிகைகூட அவ்வவ் நிர்வாகத்துறைகளுடன் தொடர்பை ஏற்படுத்தி இப்பிரச்சினைகளுக்கான தீர்வினை எட்ட வழிசமைக்க முடியும்.

இத்தகைய விடயங்கள் மட்டுமல்ல, ஊடகவியலாளனுக்குரிய பண்பு, பார்வை, ஆர்வம், துடிப்பு போன்றன சாதாரண வாசகரிடத்திலும்கூட இருக்கலாம். இப்படியானவர்கள் தொழில் சார்ந்த ஊடகவியலாளர்களாக இல்லாதபோதிலும் அவர்களின் கருத்துக்களுக்கு இடம் அளிக்க வேண்டிய தார்மீக கடமை பத்திரிகைகளுக்கு உள்ளது.

சில சந்தர்ப்பங்களில் வாசகர்கள் பலதரப்பட்ட கட்டுரைகளைக்கூட எழுதி அனுப்புவதாக இருக்கலாம். இவை அர்த்தபுஷ்டியானவையாக இருந்தால் பத்திரிகைகள் அவற்றை பிரசுரிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன. இதில் உள்ள முக்கிய விடயம் என்னவென்றால், வாசகர்கள் இவ்வாறு பத்திரிகைகளுக்கு எழுதும்போது குறித்த பத்திரிகையில் இவற்றை ஒருங்கிணைக்கும் உதவி ஆசிரியர்களிடத்தில் கனிவுத்தன்மை இருக்க வேண்டியது அவசியமாகும். காரணம், வாசகர்களின் கருத்துக்களில்கூட ஆழம் இருக்கும், நியாயம் இருக்கும் என்பதை உணரும் பண்பு அந்த உதவி ஆசிரியர்களிடத்தில் இருக்க வேண்டும்.

அதை விடுத்து வாசகர்களைப் புறக்கணிக்கும் தன்மை இருத்தல் கூடாது. உண்மையான ஊடகவியலாளனிடத்தில் வாசகர்களை மதிக்கும் பண்பு இருக்கவே செய்யும். ஆயினும், வாசகர் அனுப்புகின்றனர் என்பதற்காக அனைத்தையும் எடுத்த எடுப்பில் பிரசுரிக்க வேண்டும் என்றில்லை. அவற்றில் உள்ள உண்மைத்தன்மை, விடயதானம் ஆகியனவற்றை உறுதிப்படுத்திக் கொண்டு பிரசுரத்திற்கு ஏற்றபடி தயார்படுத்தமுடியும்.

பத்திரிகை என்பது மக்களின் குரலாக இருப்பவை என்பதற்கிணங்க வாசகர்களின் நாடித்துடிப்பை வெளிப்படுத்த வேண்டிய கடமையும் அவற்றிற்கு இருக்கவே செய்கின்றது. சாதாரண வாசகனிடத்திலிருந்து வருகின்ற சிறியதொரு கருத்துக் கடிதம்கூட மிக முக்கியமான செய்தியொன்றை உருவாக்குவதற்கான மூலமாகக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்பவர்களாக மட்டுமல்ல, பதில் அளிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். அதற்கு மனித மனங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய பக்குவத்தை அவர்கள் கொண்டிருக்க வேண்டும். ஆக... வாசகர் களோடு தோள் கொடுக்கும் பத்திரிகையாளனே உண்மை யான தோழனாக இருக்க முடியும்.

(தொடரும்)

-ரிஷபன்


வெல்லுங்கள்!

விஜய் — TOP News இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*08.10.2014* TOP News *கேள்விக்கான விடை:*
சிக்மன்ட் பிரேய்ட்

Pen Drive வெற்றியாளர்:
பே.மோகனகர்சன்,
06, தேன்தமிழ் வீதி,
உவர்மலை, திருகோணமலை.

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive
(22.10.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

**இவ்வார கூப்பன்:**
22.10.2014

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்

# மலையக நிலங்களை வாங்கிய ஐரோப்பிய செல்வந்தர்கள்

பெருந்தெருக்கள், பாலங்கள் போன்றவற்றை அமைத்ததால் இலங்கையில் அபிவிருத்திகள் அதிகரித்தன. ஆரம்பகாலத்தில் வெயாங்கொடையில் அவரி [நீல வர்ணப்பூச்சுப் பெறக்கூடிய தாவர வகையொன்று] எனும் தாவரம் வளர்க்கப்பட்டது. அது தொடர்பான கைத்தொழில் நிலையம் தங்காலையில் நிர்மாணிக்கப்பட்டது. தும்பறை, களுத்துறை, மற்றும் பத்தேகமையில் கரும்பு பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. இக்காலகட்டம் வரை கோப்பி பயிர் குறித்து இலங்கையில் ஒரு குறைவான மதிப்பே இருந்தது.

ஐரோப்பியர்கள் இலங்கையில் காலடி வைப்பதற்கு முன் இலங்கையர்கள் கோப்பி மரங்களை கண்டிருந்தாலும் அதிலிருந்து தயாரிக்கும் புகழ்பெற்ற பானத்தைப் பற்றி எதுவுமே அறிந்திருக்கவில்லை என வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. எது எப்படி இருந்தபொழுதிலும் கோப்பியைப் பயிர்ச்செய்கையாக இலங்கையில் ஆரம்பித்தவர்கள் ஒல்லாந்தர்களே ஆவர். கி.பி 1739 இல் அப்பயிர்ச்செய்கையை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதற்கு முன் இயல்பாகவே கண்டியைச் சூழ்ந்த இடத்திலேயே கோப்பிப் பயிர் அதிகம் வளர்ந்திருந்தது. எனினும், பெருந்தெருக்கள், பாலம் போன்றவை நிர்மாணிக்கப்பட்ட பின்னரே ஐரோப்பிய செல்வந்தர்கள் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் மலையகத்தில் காணிகளை வாங்கி கோப்பி பயிர்ச்செய்கையை மீண்டும் ஆரம்பித்தனர். எனினும், ஆங்கிலேய ஆட்சியின் ஆரம்பகாலத்தில் ஐரோப்பியர்கள் இலங்கையில் காணிகளை விலைக்கு வாங்குவது தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால், கி.பி 1810 இல் சேர்.அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டின் அவர்களின் கோரிக்கைக்கு இணங்கவே அந்த தடை ரத்துச் செய்யப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவ்வருடத்தின் அமைதிக்கான நொபெல் பரிசு பெறுவோர்



*2014 ஆம் ஆண்டின் அமைதிக்கான நொபெல் பரிசு, இருவருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் மீதான அடக்குமுறைகளை எதிர்த்தும் சிறுவர்களுக்கான கல்வி உரிமையை வலியுறுத்தியும் குரல்கொடுத்தும் வந்த இந்தியாவைச் சேர்ந்த கைலாஷ் சத்யார்த்தி மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா யூஸஃப்சாய் ஆகிய இருவருக்கும் இப்பரிசு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதிக்கான நொபெல் பரிசானது, ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 10 ஆம் திகதி ஒஸ்லோ நகர மண்டபத்தில் நடைபெறும் வைபவத்தில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*



இந்தியாவில் சிறுவர்களின் உரிமைகளுக்காக மிக நீண்ட காலமாக குரல்கொடுத்து வருபவர்தன் கைலாஷ் சத்யார்த்தி.

குறிப்பாக; சிறுவர் தொழிலாளர்கள், சிறுவர்கள் மீதான அடக்குமுறைகள் போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவர்களின் உரிமைகளைப் பேணுவதிலும் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் இவர் அதிகம் அக்கறை காட்டி வருகின்றார்.

இந்தியாவின் புதுடில்லியை மையமாகக் கொண்டு இவரது தலைமையின்கீழ் இயங்கிவரும் 'பச்பன் பச்சோ அந்தோலன்' என்ற தொண்டு நிறுவனம், இதுவரை ஆயிரக்கணக்காக சிறுவர் தொழிலாளர்கள்,



சிறுவர் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள், சிறுவர் அடிமைகள் போன்றோரை மீட்டெடுத்து, அவர்களுக்கு மறுவாழ்வளித்து, கல்வி கற்பதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்து வருகின்றது. கைலாஷ் சத்யார்த்தி தனது அனுபவ பகிர்வொன்றின் போது, ''சிறுவர்களை மீட்கும் முயற்சிகளில் ஈடுபட்டபோது பல்வேறு ஆபத்துக்களை எதிர்கொண்டிருக்கின்றேன். இது ஒரு நீண்ட போராட்டம் என்பது எனக்குத் தெரியும். ஆனால், அடிமைத்தனம் மனிதாபிமானத்திற்கு எதிரானது. எனது சொந்த நாட்டில் எந்தவொரு சிறுவரினதும் சுதந்திரம் பறிக்கப்படுவதை பார்த்துக்கொண்டு என்னால் பொறுமையாக இருக்க முடியாது'' என்று தெரிவித்துள்ளார்.

தனக்கு நொபெல் பரிசு கிடைக்கப்பெற்றதை அடுத்து, வெளிநாட்டு தொலைக்காட்சி சேவையொன்றுக்கு அவர் வழங்கிய பேட்டியில்;

''இந்தப் பரிசு முழு இந்தியாவுக்குமானது. சிறுவர் தொழிலாளர்கள், சிறுவர் அடிமைகள், சிறுவர் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற பிரச்சினைகளுக்குட்பட்டு, இன்றுவரை துன்பப்படுகின்ற அனைத்து



சிறுவர்களுக்கும் இதனை அர்ப்பணிக்கின்றேன்'' என்று தெரிவித்திருந்தார்.

1954 ஜனவரி 11 ஆம் திகதி இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில், விடிஷா எனும் இடத்தில் பிறந்த கைலாஷ் சத்யார்த்தி, மின் பொறியியல் துறையில் பட்டம் பெற்றவராவார். 1980 களில் தனது தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை சிறுவர்கள் தொடர்பில் பல்வேறு கோணங்களில் தனது பணிகளைத் தொடர்ந்து வருகின்றார். இவரது பணிகள் தற்போதளவில் இந்தியாவில் மாத்திரமன்றி, தெற்காசியா உட்பட, முழு உலகுக்கும் விரிவடைந்துள்ளது.

இத்தாலியின் செனட் பதக்கம், ரொபர்ட் எஃப். கென்னடி மனித உரிமைகள் விருது, திஆக்னர் சர்வதேச அமைதிக்கான விருது, நெதர்லாந்தின் தங்கக்கொடி விருது என பல கௌரவ விருதுகளை வென்றிருக்கும் இவர், தற்போது 2014 ஆம் ஆண்டின் அமைதிக்கான நொபெல் பரிசினையும் வென்றுள்ளார்.



மலாலா யூஸஃப்சாய், 1997 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி, பாகிஸ்தானின் வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தின் மிங்கோரா என்ற இடத்தில் பிறந்தார். வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தின் 'ஸ்வாட்' பள்ளத்தாக்கு குடியிருப்புப் பகுதிகளில் பெண் பிள்ளைகள் பாடசாலை செல்வதற்கும் கல்வி கற்பதற்கும் தலிபான்களால் விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து போராடியவர்தான் சிறுமி மலாலா. இதன் காரணமாக, 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஒருநாள் இவர் பாட்சாலைக்குச் சென்றுகொண்டிருந்த வேளை, தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

தற்போது, இங்கிலாந்தில் வசித்து வரும் இவர், தொடர்ந்தும் சிறுவர் மற்றும் பெண்கள் கல்வி தொடர்பில் குரல்கொடுத்து வருகின்றார். வெளிநாட்டுச் செய்திச் சேவையொன்றுக்கு வழங்கிய பேட்டியில் மலாலா கூறும்போது;

''கல்வி கற்பதற்கான உரிமையும் சந்தர்ப்பமும் உங்களுக்கு இலகுவாக கிடைத்துவிடும். இதனால், சிலவேளைகளில் உங்கள் புத்தகப்பைகூட உங்களுக்கு சுமையாக இருக்கலாம். ஆசிரியர்களின் கற்பித்தல் முறையும் கற்கும் பாடங்களும் சுமையாக இருக்கலாம். ஸ்வாட் பள்ளத்தாக்கில் தலிபான்களின் படையெடுப்புக்கு முன்னர் எமக்கும் அப்படித்தான் இருந்தது. ஆனால், எப்போது கல்வி உரிமை பறிக்கப்படத் தொடங்கியதோ, அன்றிலிருந்து அதன் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கினோம். உலகின் எந்தவொரு சிறுவனும் சிறுமியும் கல்வி கற்பதற்கான உரிமை கிடைக்கும் வரை எனது பயணம் தொடரும்'' என்றார்.




துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான போது....

மலாலா தனது 16 ஆவது பிறந்ததினத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் சிறப்புரையாற்றினார். அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் மலாலாவின் பிறந்ததினத்தை 'மலாலா தினம்' ஆக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது. பாகிஸ்தானின் முதலாவது அமைதி, உலக அமைதி அறக்கட்டளையின் தைரியத்திற்கான விருது, தேசிய இளைஞர் அமைதிக்கான பரிசு என்பன வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ள மலாலா, தற்போது 2014 ஆம் ஆண்டின் அமைதிக்கான நொபெல் பரிசினையும் வென்றுள்ளார். தனது 17 ஆவது வயதில் நொபெல் பரிசினை வென்றதை அடுத்து, 'உலகில் மிகவும் இளம் வயதில் அமைதிக்கான நொபெல் பரிசு பெற்ற முதலாவது நபர்' என்ற பெருமையையும் பெறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ராசதானிகளின் வீழ்ச்சியின் பின்னர், இலங்கையில் நிறுவப்பட்ட ராசதானிகளுள் முதலாவது ராசதானி தம்பதெனிய ஆகும். வெளிநாட்டவரின் படையெடுப்பு, உள்நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள், அரசியல் ஸ்திரமற்ற தன்மை என்பன ராசதானிகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாகின. இதனால், பிற்கால மன்னர்கள் ராசதானிகளைத் தெரிவுசெய்யும்போது பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு செயற்பட்டனர். தம்பதெனிய, யாப்பஹுவ, குருநாகல் ஆகிய ராசதானிகளை நோக்கினால் இது தெளிவாகிறது. தம்பதெனிய ராசதானிக்குப் பின்னர் இலங்கையின் ராசதானியாக விளங்கியது 'யாப்பஹுவ ராசதானி' ஆகும். இந்த ராசதானி பற்றிய சில விபரங்களை பார்ப்போம்.

# யாப்பஹுவ குன்றி

# ராசத

## அமைவிடம்

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் மஹவ நகருக்கு அண்மையில் அமைந்துள்ள தனிக் குன்றொன்றின் மீது யாப்பஹுவ ராசதானி அமைக்கப்பட்டது. அந்தக் குன்று 450 அடி உயரமானது. யாப்பஹுவ ராசதானிக் காலத்திற்கு உரிய அனைத்துக் கட்டடங்களும் இந்தக் குன்றிற்கு அருகிலேயே அமைந்துள்ளன.

## பாதுகாப்புக் கோட்டை

யாப்பஹுவ குன்று அமையப்பெற்றுள்ளமைக்கு ஏற்ப, அப்பகுதி ஒரு பாதுகாப்பான இடமாகவே கருதப்பட்டது. அக்காலத்தில் நிலவிய பாதுகாப்பற்ற தன்மையுடன் ஒப்பிடும்போது, யாப்பஹுவவில் நிலவிய பாதுகாப்பான சூழலே, ராசதானியாக்கப்படுவதற்கான காரணமாக அமைந்தது. யாப்பஹுவ போலவே சீகிரியா, தம்பதெனிய, குருநாகல் ஆகிய ராசதானிகளும் குன்றுகளை அடிப்படையாகக்கொண்டு நிறுவப்பட்டவையாகும். 'மன்னன்' என்பவன் 'மலை உச்சியில் வாழும் கடவுள்' என்ற கருத்து அக்காலத்தில் நிலவியது. எனவே, குன்றின்மீது ராசதானியை அமைப்பதில், இக்கருத்தும் செல்வாக்கு செலுத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## நிர்வாக மத்திய நிலையமாக மாறுதல்



'சுப' என்ற பெயருடைய தளபதியே யாப்பஹுவவை முதன்முதலில் நிர்வாக மத்திய நிலையமாக்கினான். அக்காலகட்டத்தில் பொலன்னறுவை கலிங்கமாகனின்கீழ் இருந்தது. வம்சக் கதைகளில் யாப்பவ்வ, யாப்பவ்கல போன்ற பெயர்களால் யாப்பஹுவ குறிப்பிடப்படுகின்றது. சுப தளபதி அப்பகுதியில் குடியேறிய பின்னர், சபவால, சுபகிரிபுர என்ற பெயர்களாலும் யாப்பஹுவ அழைக்கப்பட்டது. யாப்பஹுவவை முதன்முதலில் ராசதானியாக்கியது முதலாம் புவனேகபாகு மன்னன் ஆவான்.

## தம்பதெனியவிலிருந்து யாப்பஹுவவுக்கு...

நான்காம் விஜயபாகு மன்னனே தம்பதெனியவை ஆட்சிசெய்த மூன்றாவது மன்னன் ஆவான். இரண்டு ஆண்டுகள் மாத்திரமே அவனால் ஆட்சி செய்யக்கூடியதாக இருந்தது. 'மித்த' என்ற பெயருடைய சேனாதிபதி, அரச மாளிகையின் ஊழியன் ஒருவனுக்கு லஞ்சம் கொடுத்து மன்னனை கொலை செய்வித்தான். நான்காம் விஜயபாகுவின் சகோதரனான புவனேகபாகுவையும் கொலை செய்வதற்கு அவன் முயன்றான். எனவே, புவனேகபாகு தனது பாதுகாப்பின் பொருட்டு யாப்பஹுவவிற்குத் தப்பிச் சென்றான். அக்காலத்தில் இருந்த ஆரிய படைத் தளபதியின் உதவியுடன், சேனாதிபதி மித்தவைக் கொலை செய்து, சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டான். இதனை அடுத்து, கி.பி. 1272 ஆம் ஆண்டு 'முதலாம் புவனேகபாகு' என்ற பெயரில் தம்பதெனியவின் மன்னனானான். எனினும், அரசியல் ரீதியாக ஏற்பட்ட பல்வேறு கிளர்ச்சிகளின் காரணமாக, முதலாம் புவனேகபாகு மன்னன் தன்பதெனியவைக் கைவிட்டு யாப்பஹுவவை ராசதானியாக்கிக்கொண்டான்.







## வன்னியர்களின் எதிர்ப்பு

முதலாம் புவனேகபாகு மன்னனுக்கு எதிராக சில வன்னியர்கள் (வன்னி அதிகாரிகள்) செயற்பட்டனர். (வன்னியர்கள் எனப்படுவோர் அக்காலத்தில் காட்டுப் பிரதேசங்களை ஆட்சிசெய்த பிரதேசத் தலைவர்களாவர்). எனினும், முதலாம் புவனேகபாகு மன்னன் இவர்களை அடக்கி ஆட்சி செலுத்தி வந்தான்.

## தமிழர்களின் ஆக்கிரமிப்பு

முதலாம் புவனேகபாகுவின் ஆட்சிக்காலத்தில் தமிழ்ப் படையொன்றின் ஆக்கிரமிப்பும் இலங்கையில் நிலவியது. அதன் ஒரு படைப்பிரிவில் சேனாதிபதியாக கலிங்கராயர் என்பவன் திகழ்ந்தான். மற்றுமொரு சேனையின் சேனாதிபதியாக சோடகங்க (சோழகங்க) என்ற இளவரசன் விளங்கினான். இந்த தமிழ் ஆக்கிரமிப்பினை முதலாம் புவனேகபாகு மன்னன் வெற்றிகரமாக முறியடித்தான்.

## பிரதியுபகாரமாக வடக்கிற்கு ஒரு நிர்வாகி

தம்பதெனிய ராசதானிக் காலத்தில் சந்திரபானு என்பவன் இரண்டாம் முறையாக இலங்கையை ஆக்கிரமித்த போது, இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன், பாண்டிய பேரரசனின் உதவியைக் கோர வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த ஆக்கிரமிப்பில் சந்திரபானு தோற்கடிக்கப்பட்டதுடன், பாண்டிய பேரரசன் செய்த உதவிக்கு பிரதியுபகாரமாக அவனது பிரதிநிதியாக சந்திரபானுவின் மகனை வடக்கின் நிர்வாகியாக

நியமித்ததாகப் பாண்
டுக்களின்மூலம் தெ
சந்திரபானுவின் மகனு
ராலேயே அழைக்க
தனது தந்தையைக்
எதிராகப் பழி வாங்
வடக்கின் ஆட்சியா
சந்திரபானுவின் மக
லாம் என முதலாம்
மன்னன் எண்ணிய
தொடர்பாக அவதா
இருக்க வேண்டிய

அவனுக்கு ஏற்பட்
யாப்பஹுவவைத்
தெரிவுசெய்தமை
காரணமாக அமை

## வெளிநாட்டு

வெளிநாட்டு வ
முன்னேற்றி, இந்
ளாதாரத்தைப் பல
முதலாம் புவனே
கவனம் செலுத்தி
தில் வர்த்தகத் து
இறக்குமதிகளில்
வகித்தவர்கள் அ
அதன்மூலம் அவ
லாபமீட்டினர். எ
மத்தியஸ்தர்கள் இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...மிப்பு

...பின் ஆட்
...யொன்
...கையில்
...டப்பிரி
...கராயர்
...றுமொரு
...க சோட
...ளவரசன்
...ஆக்கிர
...னகபாகு

நியமித்ததாகப் பாண்டியக் கல்வெட்டுக்களின்மூலம் தெரியவருகின்றது. சந்திரபானுவின் மகனும் அதே பெயராலேயே அழைக்கப்பட்டான்.

தனது தந்தையைக் கொன்றமைக்கு எதிராகப் பழி வாங்கும் நோக்கில் வடக்கின் ஆட்சியாளனாகத் திகழும் சந்திரபானுவின் மகன் செயற்படலாம் என முதலாம் புவனேகபாகு மன்னன் எண்ணியதோடு, இது தொடர்பாக அவதானத்துடன் இருக்க வேண்டிய நிலையும் சுல்தானுடன் நேரடியாகவே வர்த்தகத் தொடர்பினை ஏற்படுத்த முதலாம் புவனேகபாகு மன்னன் விரும்பினான். இதன்பொருட்டு கி.பி. 1283 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எகிப்திய சுல்தானிடம் தூதுக்குழுவொன்றை அனுப்பினான். எனினும், அந்தப் பயணம் வெற்றியளிக்கும் முன்னரே மன்னன் இறந்துவிட்டான்.

## நாட்டில் ஸ்திரமற்ற நிலை

முதலாம் புவனேகபாகு மன்னனுக்குப் பின்னர் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால், நாடு இக்கட்டான நிலைக்கு உள்ளானது. மேலும், நான்காம் விஜயபாகுவின் மகனான பராக்கிரமபாகுவிற்கும் முதலாம் புவனேகபாகுவின் மகனுக்கும் இடையே அதிகாரப் போட்டி நிலவியதாக மூலாதாரங்களின் மூலம் தெரியவருகிறது. இதனால், நாட்டில் ஸ்திரமற்ற நிலை ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



# ...குன்றில் நிறுவப்பட்ட ...சதானி



அவனுக்கு ஏற்பட்டது. அவன் யாப்பஹுவவைத் தலைநகராகத் தெரிவுசெய்தமைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

...க ...வாகி

...காலத்தில்
...ண்டாம்
...ஆக்கிரமித்த
...ிரமபாகு
...சனின்
...டிய நிலை
...பிப்பில்
...பட்டது
...செய்த
...
...திரபானு
...வாகியாக

## வெளிநாட்டு வர்த்தகம்

வெளிநாட்டு வர்த்தகத்தை முன்னேற்றி, இந்நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதில் முதலாம் புவனேகபாகு மன்னன் கவனம் செலுத்தினான். அக்காலத்தில் வர்த்தகத் துறையில் ஏற்றுமதி - இறக்குமதிகளில் மத்தியஸ்தம் வகித்தவர்கள் அரேபியர்களாவர். அதன்மூலம் அவர்கள் நல்ல லாபமீட்டினர். எனவே, இந்த மத்தியஸ்தர்கள் இன்றி எகிப்திய

## மேலாதிக்கம்

முதலாம் புவனேகபாகு மன்னன் கி.பி. 1284 ஆம் ஆண்டு இறந்தான். அவன் இறந்த பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி சரியாகக் குறிப்பிடப்படவில்லை. முதலாம் புவனேகபாகுவிற்குப் பின்னர் மேலாதிக்கமொன்று நிலவியதாக 'தலதாசிரித்த' என்ற நூலில் குறிப்பிடப்படுகிறது. 'மேலாதிக்கம்' என்பதற்கு இரு வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. 'இரு அரசுகளுக்கு இடைப்பட்ட காலம்' என்பது ஒன்றாகும். 'வெளிநாட்டு ஆட்சியாளரின் கீழிருந்த காலம்' என்பது மற்றைய கருத்தாகும்.

## புனிதப் பொருட்களை எடுத்துச் செல்லல்

நாட்டில் ஸ்திரமற்ற தன்மை நிலவும் வேளையில், பாண்டிய பேரரசைச் சேர்ந்த ஆரியச் சக்கரவர்த்தி என்பவன் இலங்கைமீது படையெடுத்து, தந்ததாது மற்றும் பாத்திர தாதுவை இங்கிருந்து தனது நாட்டுக்கு எடுத்துச் சென்று பாண்டிய மன்னனிடம் ஒப்படைத்தான்.



## மூன்றாம் பராக்கிரமபாகு மன்னன்

நான்காம் விஜயபாகுவின் மகனான இளவரசர் பராக்கிரமபாகு, பாண்டிய மன்னனுடன் நட்புறவை ஏற்படுத்திக்கொண்டான். பின்னர், பாண்டிய நாட்டிற்குச் சென்று அம்மன்னனுடன் சமாதானம் செய்து, இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட புனிதப் பொருட்களை மீட்டு வந்தான். அவன், 'மூன்றாம் பராக்கிரமபாகு' என்ற பெயரில் 1287 ஆம் ஆண்டு பொலன்னறுவையில் அரசனானான்.

## இரண்டாம் புவனேகபாகு மன்னன்

மூன்றாம் பராக்கிரமபாகு குறுகிய காலமே ஆட்சி செய்தான். அதற்கிடையில், முதலாம் புவனேகபாகுவின் மகன் பொலன்னறுவையை ஆக்கிரமித்து, 'இரண்டாம் புவனேகபாகு' என்ற பெயரில் அரசனானான். இவனது ஆட்சிக் காலத்தில் சிறப்பாக எதுவும் நிகழ்ந்ததாகத் தகவல்கள் எதுவும் இல்லை. இவனைப் பற்றிக் கிடைக்கும் விபரங்களின்படி, இவன் ஒன்பது ஆண்டுகள் நாட்டை ஆட்சிசெய்துள்ளான்.

## யாப்பஹுவவில் இருந்து குருநாகலுக்கு...

இரண்டாம் புவனேகபாகு யாப்பஹுவவில் அதிக காலம் இருக்கவில்லை. அவன் குருநாகலையைத் தனது ராசதானியாக்கிக்கொண்டான். இதன்படி, குருநாகல் எமது நாட்டின் ஐந்தாவது ராசதானியானது.


## கலைகள்

யாப்பஹுவ குன்றின் உச்சியில் சுமார் ஐந்து ஏக்கர் நிலப் பரப்பில் பரந்துள்ள யாப்பஹுவ ராசதானிக்குட்பட்ட இடிபாடுகளை இன்றும் காணலாம்.

(வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் மங்கள்யான் ஆய்வுக்கலம் செவ்வாய் சுற்றுப்பாதையை அடைந்தது...




கடந்த செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி முழு இந்தியாவுமே பெருமைப்படும் ஒரு நாளாக அமைந்தது. உண்மையில் அது இந்தியா மட்டுமன்றி, முழு ஆசியாவுமே பெருமைப்படக்கூடியதொரு விடயமாகும். இந்திய விண்வெளி நிறுவனமும் அந்நாட்டின் விஞ்ஞானிகளும் இணைந்து நிர்மாணித்த 'மங்கள்யான்' எனும் ஆளில்லா ஆய்வுக்கலம் 10 மாதங்கள் பயணித்து, செவ்வாய் கிரகத்தின் சுற்றுப்பாதைக்குள் பிரவேசித்தமையே இந்த பெருமைக்குரிய சம்பவமாகும்.

## ஆசியாவுக்கே பெருமை

''இந்தியர்கள் என்ற ரீதியில் நாம் பெற்ற இந்த வெற்றி, முழு ஆசியாக் கண்டத்துக்கே பெருமை தரும் ஒரு விடயமாகும்'' என பிரதமர் மோடி தெரிவித்திருந்தார். செவ்வாய் கிரகத்தை நோக்கிய 'மங்கள்யான்' விண்வெளி நடவடிக்கை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) கீழேயே மேற்கொள்ளப்பட்டது.

## மங்கள்யான்

'மங்கள்யான்' ஆய்வுக்கலம் செவ்வாயின் சுற்றுப்பாதைக்குள் பிரவேசிக்கும் தினத்தை மிகவும் எதிர்பார்த்துக் காத்திருந்த இந்திய விஞ்ஞானிகளும் இந்திய மக்களும் அதன் வெற்றிகரமான பயணத்தைக் கேள்விப்பட்டதும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். 1,550 கிலோ கிராம் நிறையுள்ள 'மங்கள்யான்' ஆய்வுக் கலமானது, கடந்த வருடம் நொவெம்பர் மாதத்தில் ரொக்கெட் ஒன்றின் உதவியுடன் புவியில் இருந்து செவ்வாய் நோக்கி ஏவப்பட்டது. ஸ்ரீ ஹரிகோட்டாவிலுள்ள 'சதீஷ் தவான்' ஏவுதளத்தில் இருந்தே இது விண்ணில் ஏவப்பட்டது. இந்தியாவின் விண்வெளி நடவடிக்கைகள் இந்த மத்திய நிலையத்திலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மங்கள்யான் ஆய்வுக்கலமானது, எதிர்வரும் 6 மாதங்களுக்கு செவ்வாய் சுற்றுப்பாதையில் நிலைகொண்டவாறு செவ்வாய் கிரக வளிமண்டலத்தை ஆய்வு செய்யும் என இந்திய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். மங்கள்யான் ஆய்வுக் கலகத்தில் கெமராவொன்றும் தொடர்பாடல் கருவிகள் பலவும் பொருத்தப்பட்டுள்ளன. செவ்வாயின் வளிமண்டலத்தில் மெத்தேன் உள்ளதா? என தேடிப்பார்ப்பதும் மங்கள்யானின் பணிகளில் ஒன்றாகும்.





## இந்தியா முன்னணியில்...

இந்த வெற்றிகரமான விண்வெளி நடவடிக்கையின்மூலம் ஆசிய வலய நாடுகளிலேயே விண்வெளி ஆய்வுத்துறையில் இந்தியா முன்னணி நாடாக முன்னேறி உள்ளது என வெளிநாட்டுச் செய்திச் சேவைகள் தெரிவிக்கின்றன.

(- ஜெ)

# நீங்களும் மெஜிக் செய்யலாம்

## வினோத இலக்கம்

இன்று நாம் உங்களுக்கு கற்றுத் தரப்போவது இலக்கங்களுடன் தொடர்புடைய மெஜிக் போன்றதொரு விடயமாகும். இதனை இலக்கங்களால் விளையாடும் ஒரு விளையாட்டு என்றால் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

**தேவையான பொருட்கள்:**

- ஒரு தாள்
- ஒரு பேனை அல்லது பென்சில்
- கணிப்பான் (கல்கியூலேட்டர்).



**செய்முறை:**

ஒரு தாளில் 8 இலக்கங்களை எழுதிக்கொள்ளுங்கள். அந்த இலக்க வரிசையில் இலக்கம் 8 இனைத் தவிருங்கள். ஏனைய இலக்கங்களில் இருந்து ஏதாவதொன்றை தெரிவுசெய்து,அதனை 9 ஆல் பெருக்கி, கிடைக்கும் விடையால் நீங்கள் ஏற்கனவே எழுதியுள்ள 8 இலக்கங்களையும் பெருக்குங்கள். அதன் பின் கூட்டுத்தொகையைப் பாருங்கள். நீங்கள் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

**1 ஆவது படிமுறை:**

1 2 3 4 5 6 7 9

1 முதல் 9 வரையான எண்களை உங்களிடமுள்ள தாளில் வரிசையாக எழுதிக்கொள்ளுங்கள். இவ்வாறு இலக்கங்களை எழுதும் போது இலக்கம் 8 இனை எழுத வேண்டாம்.

**2 ஆவது படிமுறை:**

1 2 (3) 4 5 6 7 9

நீங்கள் எழுதிய இலக்கங்களில் ஏதாவதொன்றை வட்டமிடச் சொல்லி ஒருவரிடம் கூறுங்கள்.

**3 ஆவது படிமுறை:**

$9 \times 3 = 27$

அவர் வட்டமிட்ட இலக்கத்தை, இலக்கம் 9 ஆல் பெருக்கும்படி அவரிடம் கூறுங்கள்.

**4 ஆவது படிமுறை:**

பெருக்கி வரும் விடையால் நீங்கள் ஏற்கனவே எழுதிய இலக்கங்களை பெருக்கும்படி கூறுங்கள். வரும் இலக்க வரிசைகளை கூட்டிப்பார்க்கச் சொல்லுங்கள்.

```
 12(3)45679
        27×
 ---------
  86419753
 24691358
 ---------
 333333333
```

### வினோதம்

கூட்டுத்தொகை ஆச்சரியப்படுத்துவதாக இருக்கும் அல்லவா? ஏனெனில், வட்டமிட்ட அதே இலக்கம் 9 தடவைகள் வந்திருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

-மெஜிக் மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மாண்பை உறுதிப்படுத்த உருவான
# ஐக்கிய நாடுகள் சபை



இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரு பெரும் உலக யுத்தங்களினால் கோடிக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். பல கோடி மக்கள் அங்கவீனர்களாயினர். மேலும் பல கோடி மக்கள் தங்கள் இருப்பிடங்களையும் சொத்துக்களையும் முற்றாக இழந்து அகதிகளாயினர். 'இத்தகைய கொடிய யுத்தம் இனிமேல் ஒருபோதும் ஏற்படாமல் ஒன்றிணைவோம்' என்ற தாரக மந்திரத்துடன் யுத்தத்தை நிறுத்த உலக மக்கள் கைகோர்த்தனர்.

இச்செயற்பாட்டை நிறைவேற்றும் பொருட்டு உலக மக்களிடையே ஒரு சிநேகபூர்வமான, நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தும் நோக்கத்தின் பெறுபேறாகவே ஐக்கிய நாடுகள் சபை மலர்ந்தது. இச்செயற்பாடு 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமையால், ஒவ்வொரு வருடமும் இந்நாள் ஐக்கிய நாடுகள் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

## ஐ.நா. சபையின் வரலாறு

1942 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இரண்டாம் உலக யுத்தம் மிகக் கொடூரமான முறையில் நடந்துகொண்டிருந்தது. முழு உலகமும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மக்கள் செய்வதறியாது திகைத்தனர். இத்தகைய பின்னணியில் அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் ஒன்று கூடிய 26 நாடுகளின் பிரதிநிதிகள் ஐ.நா. கொள்கையை ஆதரித்து கையொப்பமிட்டனர். பின்னர் 1943 ஒக்டோபர் மாதம் சோவியத் ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் ஒன்றுகூடிய சோவியத் சமவுடமை குடியரசு, ஐக்கிய ராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளின் தலைவர்கள் மொஸ்கோ பிரகடனத்தில் கைச்சாத்திட்டனர். யுத்தம் முடிவடைந்தவுடனேயே சமாதானத்தை தொடர பலம் மிக்கதோர் நாடுகளின் அமையத்தை நிரந்தரமாக உருவாக்குவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

1945 ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் திகதி சென் ஃபிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற மாநாட்டில் பங்குபற்றிய 50 நாடுகளின் பிரதிநிதிகள் இப்பிரகடனத்தை அங்கீகரித்தனர். அதே ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி பாதுகாப்புச் சபையின்




ஐ.நா.செயலாளர் பான் கீ மூன்

நிரந்தர அங்கத்துவ நாடுகளாகிய ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய சோவியத் சமவுடமை குடியரசு, பிரான்ஸ், பிரித்தானியா, சீனா ஆகிய நாடுகள் இந்த ஐ.நாடுகளின் பிரகடனத்திற்கு கையொப்பமிட்டு அதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டன. இவ்வாறே ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டது.

## இன்றைய நிலை

1945 இல் ஐக்கிய நாடுகள் சபை உருவானபோது, அதில் 50 நாடுகள் மாத்திரமே அங்கம் வகித்தன. இன்று அங்கத்துவ நாடுகளின் தொகை 193 ஆகும். ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்திற்கென்றே ஆரம்பிக்கப்பட்டாலும், உலக சமூதாயத்தின் பற்பல தனிச் சிறப்புத் தேவைகள் கருதி இன்று மேலும் பல உப நிறுவனங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் உருவாகிவிட்டன.



## ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ மொழிகள்

ஆங்கிலம், பிரெஞ்ச், ஸ்பானிஷ், ரஷ்ய, சீனம், அரபு ஆகிய ஆறு மொழிகள் ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ மொழிகளாகும். எனினும், இதன் செயலகத்தில் அன்றாட கருமங்கள் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச் ஆகிய இரு மொழிகளில் மாத்திரமே நடைபெறுகின்றன.

## ஐ.நா.வின் தலைமையகம்

ஐக்கிய நாடுகளின் தலைமையகம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது. இது அமைந்துள்ள நிலப்பிரதேசமும் கட்டடத் தொகுதியும் சர்வதேச நாடுகளின் வலயமாகவே கருதப்படுகின்றது. ஒஸ்ட்ரியாவின் தலைநகரான வியன்னாவிலும் சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரிலும் ஐ.நா. சபையின் அலுவலகங்கள் அமைந்துள்ளன.

## செயலாளர் நாயகம்

ஐக்கிய நாடுகள் சபையின் மிக முக்கிய பதவி செயலாளர் பதவியே. அவர் நடுநிலை தவறாது பணியாற்ற வேண்டும். இவர் பாதுகாப்புச்சபையின் அங்கீகாரத்துடன், பொதுச் சபையால் 5 வருடங்களுக்கு சேவையாற்றுவதற்கு தெரிவு செய்யப்படுவார். தற்போதைய ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆவார்.

## ஐ. நா. சபையின் நிறுவனங்கள்

ஐ.நா. சபையின் செயற்பாடுகள் உலகெங்கும் பரவியுள்ளன. இவை 6 பிரதான நிறுவனங்கள் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. அவையாவன;

பொதுச்சபை, நம்பிக்கை, பொறுப்புச்சபை, பாதுகாப்புச் சபை, சர்வதேச நீதிமன்றம், பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திச் சபை செயலகம். சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்து நாட்டின் ஹேக் நகரில் அமைந்துள்ளது. ஏனைய 5 நிறுவனங்களும் நியூயோர்க் நகரில் தலைமையகத்திலேயே இயங்குகின்றன.

(அ)

United Nations

ஒக்டோபர் 24
ஐக்கிய நாடுகள் தினம்

## ஐக்கிய நாடுகளின் சுலோகமும் கொள்கையும்

- கோர யுத்தங்களில் இருந்து எதிர்கால சந்ததியினரைப் பாதுகாத்தல்
- அடிப்படை மனித உரிமையிலும், மனித சுபாவத்தின் கௌரவத்தையும் ஆண், பெண் இரு பாலாரதும் உரிமைகளையும் அதேவேளை பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இனங்களினது உரிமைகள் எவ்வித பாகுபாடும் இன்றி சமமாகப் பேணுதல், மனித சமுதாயத்தினரிடையே நம்பிக்கையை மீண்டும் கட்டி எழுப்புதல், அயலவர்கள் என்ற ரீதியில் அந்நியோன்ய ஒற்றுமையுடன் ஒன்றாக வாழ்தல்.
- சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக எமது சக்தியை முழுமையாகப் பிரயோகிப்பது தவிர, எவ்வித காரணத்திற்காகவும் யுத்த சக்தியை பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.
- உலகின் சகல நாடுகளிலும் சகல இனங்களினதும் பொருளாதார, சமூக அபிவிருத்தியை உச்சநிலைக்குக் கொண்டுவர சர்வதேச ஒத்துழைப்புகளைப் பெறுதல்.
- மக்களின் சுயநிர்ணய தீர்மானங்களையும் சமவுரிமை குறித்த அடிப்படைவாதத்தையும் மதிப்பதுடன், இனங்களுக்கிடையில் நட்புறவைப் பேணுதல்.
- ஏழை எளிய மக்களுக்கு மிகச் சிறந்த வாழ்க்கையை அனுபவிக்க உதவுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் கமல், சரத், மாமி ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**සරත්:** **කමල්, එන්න.. එන්න.. අම්මේ! මේ කවුද ඇවිත් තියෙන්නේ කියල බලන්න.**
கமல், என்ன... என்ன... அம்மே! மே கவுத எவித் தியென்னே கியல பலன்ன.
சரத்: **கமல், வாங்க... வாங்க... அம்மா! இதோ யார் வந்திருக்கிறார் என்று பாருங்கள்.**

**නැන්දා:** **ආ.. පුතා, තනියම ද ආවේ?**
ஆ... புதா, தனியம த ஆவே?
மாமி: **ஆ... மகன், தனியாகவா வந்தீர்கள்?**

**කමල්:** **ඔව් නැන්දේ. දවස් හතරක් නිවාඩුනේ.**
ஒவ் நெந்தே. தவஸ் ஹதறக் நிவாடுனே.
கமல்: **ஆம் மாமி. நான்கு நாட்கள் விடுமுறை தானே.**

**නැන්දා:** **අම්මලා සනීපෙන් ද පුතා?**
அம்மலா சனீபென் த புதா?
மாமி: **அம்மா எல்லோரும் சுகமாக இருக்கிறார்களா மகன்?**

**කමල්:** **ඔව් නැන්දේ. සේරම දෙනා සනීපෙන් ඉන්නවා.**
ஒவ் நெந்தே. சேரம தெனா சனீபென் இன்னவா.
கமல்: **ஆம் மாமி. எல்லோரும் சுகமாக இருக்கிறார்கள்.**

**සරත්:** **ඉතින් කමල්, කොහොමද තොරතුරු?**
இதின் கமல், கொஹொமத தொரதுரு?
சரத்: **இனி கமல், எப்படி சுகம்?**

**කමල්:** **මට අද එනකොට ඔයාගේ යාලුවෙක් හමුවුනා.**
மட்ட அத எனகொட்ட ஒயாகே யாலுவெக் ஹமுவுனா.
கமல்: **நான் இன்று வரும்போது உங்களுடைய நண்பரொருவரைச் சந்தித்தேன்.**

**සරත්:** **මගේ යාලුවෙක්? ඒ කවුද?**
மகே யாலுவெக்? ஏ கவுத?
சரத்: **என்னுடைய நண்பனா? அது யார்?**

**කමල්:** **නිමල් කියලා කෙනෙක්.**
நிமல் கியலா கெனெக்.
கமல்: **நிமல் என்று ஒருவர்.**

**සරත්:** **නිමල්ව ඔයාට කොහේද හමුවුනේ?**
நிமல்வ ஒயாட்ட கொஹேத ஹமுவுனே?
சரத்: **நிமலை நீங்கள் எங்கே சந்தித்தீர்கள்?**

**කමල්:** **කොළඹ ඉඳල මම එයා එක්ක තමා ආවේ.**
கொழம்ப இந்தலா மம எயா எக்க தமா ஆவே.
கமல்: **கொழும்பில் இருந்து நான் அவரோடுதான் வந்தேன்.**

**සරත්:** **ඇත්තද? නිමල් හරි හොඳයි.**
எத்தத? நிமல் ஹரி ஹொந்தய்.
சரத்: **அப்படியா? நிமல் மிகவும் நல்லவர்.**

**කමල්:** **මට එයාලගේ ගෙදරත් එන්න කිව්වා.**
மட்ட எயாலகே கெதறத் என்ன கிவ்வா.
கமல்: **எனக்கு அவருடைய வீட்டிற்கும் வரச் சொன்னார்.**

### பயிற்சி

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. நான்கு நாட்கள் விடுமுறை.
..............................................
ii. நண்பரொருவரைச் சந்தித்தேன்.
..............................................
iii. நான் அவரோடுதான் வந்தேன்.
..............................................




## Affirmative Sentence - Negative Sentence
## உடன்பாடு வாக்கியம் -எதிர்மறை வாக்கியம்

✱ **Have to** அல்லது **Has to** எனும் வினைச்சொல்லுடன், ஏதாவதொரு மூலவினைச் சொல்லை (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட உடன்பாடு வாக்கியங்களையும் அவற்றின் எதிர்மறை வாக்கியங்களையும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) I have to buy a new pen.
நான் புதிய ஒரு பேனா வாங்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஆ) I don't have to buy a new pen.
நான் புதிய பேனா ஒன்று வாங்க வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

✱ I have to buy.
நான் வாங்க வேண்டியுள்ளது.

✱ I don't have to buy.
நான் வாங்க வேண்டியதில்லை.

இ) You have to give your passport.
நீ உனது கடவுச்சீட்டை கொடுக்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஈ) You don't have to give your passport.
நீ உனது கடவுச்சீட்டை கொடுக்க வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

✱ You have to give.
நீ கொடுக்க வேண்டியுள்ளது.

✱ You don't have to give.
நீ கொடுக்க வேண்டியதில்லை.

உ) We have to stay in the hostel.
நாங்கள் விடுதியில் தங்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஊ) We don't have to stay in the hostel.
நாங்கள் விடுதியில் தங்க வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம்-Negative Sentence)

✱ We have to stay.
நாங்கள் தங்க வேண்டியுள்ளது.

✱ We don't have to stay.
நாங்கள் தங்க வேண்டியதில்லை.

எ) They have to pay more money.
அவர்கள் அதிக பணம் செலுத்த வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஏ) They don't have to pay more money.
அவர்கள் அதிக பணம் செலுத்த வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

✱ They have to pay.
அவர்கள் செலுத்த வேண்டியுள்ளது.

✱ They don't have to pay.
அவர்கள் செலுத்த வேண்டியதில்லை.

ஐ) The children have to pay more money.
சிறுவர்கள் அதிக பணம் செலுத்த வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஒ) The children don't have to pay more money.
சிறுவர்கள் அதிக பணம் செலுத்த வேண்டியதில்லை.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

✱ The children have to pay.
சிறுவர்கள் செலுத்த வேண்டியுள்ளது.

✱ The children don't have to pay.
சிறுவர்கள் செலுத்த வேண்டியதில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியின் சொற்கள்



## நாரத முனிவரும் வழிப்பறிக் கொள்ளைக்காரனும்

முன்னொரு காலத்தில் ஒரு கொள்ளைக்காரன் வாழ்ந்து வந்தான். அவனது பெயர் ரத்னாகர். அவன் ஒரு தடவை நாரத முனிவரை வழியில் சந்தித்தான். அவரிடம் கொள்ளையிட முயன்றான். அப்பொழுது நாரத முனிவர், ''என்னிடம் கொள்ளையிடுவதற்கு ஒன்றுமில்லை சகோதரா, நீ ஏன் இந்த பாவச் செயலைச் செய்கிறாய்? இதற்கு தண்டனையாக நீ நரகம் செல்ல வேண்டியிருக்கும்'' என்று கூறினார். அதற்கு அவன், ''எனக்கு எனது குடும்பம், குழந்தைகளை போஷித்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உள்ளது. அதற்காகத்தான் நான் இந்த தொழிலைச் செய்கிறேன்'' என்றான். ''அப்படியானால், உன் குடும்பத்தார் உனக்குக் கிடைக்கும் தண்டனையைப் பகிர்ந்துகொள்வார்களா?'' என்று கேட்டார் நாரதர். அப்போது அவன், ''அது எனக்குத் தெரியாது'' என்றான். ''அப்படியானால் நீ உன்னுடைய தாய், தந்தை குடும்பத்தினர் அனைவரிடமும் சென்று இதுபற்றிக் கேட்டு வா'' என்று கூறினார். அதற்கு ரத்னாகர் நாரதரிடம், ''நான் வீட்டிற்கு சென்றுவிட்டால் நீங்கள் இங்கிருந்து ஓடிவிடுவீர்களே'' என்று கூறினான்.

அதற்கு நாரத முனிவர் அவனிடம், ''அப்படியாயின், நீ என்னை ஒரு மரத்துடன் கட்டிவிட்டுச் சென்று வா'' என்று கேட்டுக்கொண்டார்.

அதன்படி, ரத்னாகர் நாரதரை ஒரு மரத்துடன் கட்டிவிட்டு வீடு சென்றான். முதலில் தாய், தந்தையரிடம், ''உங்களுக்கு நான் எவ்வாறு பணம் கொண்டு வருகிறேன் என்பது தெரியுமா?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள் ''ஆம் நீ திருடி, கொள்ளையடித்து பொருள் சம்பாதிக்கின்றாய்'' என்றார்கள். அப்படியானால், எனக்கு கிடைக்கும் தண்டனையில் நீங்களும் பங்கேற்பீர்களா?'' என்று அவன் கேட்க அவர்கள், ''உனது தண்டனையின் பங்கை பகிர்ந்துகொள்ள எம்மால் முடியாது. உனது பங்கு உன்னுடையது'' என்றனர். அவ்வாறே, அவன் தனது மனைவியிடமும் பிள்ளைகளிடமும் கேட்டுக் கொண்டான். அவர்கள் அனைவரும் அவனது தண்டனையின் பங்கைப் பகிர்ந்து கொள்ள முடியாது என்று மறுத்தார்கள். அவன் உடனடியாக ஓடோடி நாரதரிடம் சென்று அவரது கட்டுக்களை அவிழ்த்து விட்டான். அவரவர் செய்யும் செயலுக்கு அவர்கள்தான் அதன் பயனை அனுபவிக்க வேண்டும் என்று நாரதர் உபதேசித்தார். அதன்பின் அவன் களவுத்தொழிலை விட்டு நாரத முனிவரிடம் ஞானம் பெற்று, தவம் செய்து, 'வால்மீகி' முனிவரானார். அவர்தான் இராமாயணத்தை சமஸ்கிருத, மொழியில் இயற்றியவர்.



-பிரேம் ராவத்

# தெரிந்து கொள்வோம்

* இலங்கையில் பணத்தாள்களை அச்சடித்தல், பண நிரம்பலைக் கட்டுப்படுத்தல் போன்ற கருமங்களை மேற்கொள்ளும் நிறுவனம் எது?

  இலங்கை மத்திய வங்கி




* மரமொன்றை வெட்டுவதற்கு யாரிடமிருந்து அனுமதி பெற வேண்டும்?

  பிரதேச செயலாளரிடமிருந்து



* இலங்கையில் 1988 இல் எத்தனை மாகாண சபைகள் இருந்தன? இன்று எத்தனை சபைகள் உள்ளன?

  1988 - 8 மாகாண சபைகள்
  2014 - 9 மாகாண சபைகள்

* இலங்கையில் எத்தனை கல்வி மாவட்டங்கள், எத்தனை கல்வி வலயங்கள் இயங்குகின்றன?

  கல்வி மாவட்டங்கள் - 31
  கல்வி வலயங்கள் - 94



* 1963 இல் இலங்கை சிவில் சேவை ஸ்ரீலங்கா சிவில் சேவையாக மாற்றியமைக்கப்பட்டது. அதில் 'விதானை' (ஆராச்சி) முறைக்குப் பதிலாக உருவாக்கப்பட்ட பதவி எது?

  கிராம சேவையாளர் (G.S) பதவி

* வன்னி தேர்தல் மாவட்டத்தில் அடங்கும் நிர்வாக மாவட்டங்கள் எவை?

  மன்னார், வவுனியா, முல்லைத்தீவு



* இலங்கையில் உயர் நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் எந்த நகரங்களில் இருந்து இயங்குகின்றன?

  கொழும்பு நகரில்



* ஜூலியன் அசேஞ் என்பவர் யார்? இவரை ஐக்கிய அமெரிக்கா அரசு கைது செய்ய முயன்று வருவது ஏன்?

  விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் ஸ்தாபகர். இவர் ஐ.அமெரிக்காவின் உள்நாட்டு ரகசியங்களை வெளியிட்டமையால் இவரை கைதுசெய்ய அந்நாட்டு அரசு முயன்று வருகின்றது.



தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5856

க.யதுர்சன், அல்வாய் வடக்கு, அல்வாய்.



அங். இல: 5857

எச்.அன்ஃபாய் அஹமட், கிரகல வீதி, மாவனல்லை.



அங். இல: 5858

இ.ஜோனட், நாவற்குடா, மட்டக்களப்பு.



அங். இல: 5859

எம்.ராஷித், வத்தல்பொல, பாணந்துறை.



அங். இல: 5860

எம்.நிகாஸ், மையவாடி வீதி, மட்டக்களப்பு.



அங். இல: 5861

எஸ்.ஹனான், வாழைச்சேனை, மட்டக்களப்பு.



அங். இல:5862

என்.எஃப்.நுஹா, வத்தல்பொல, பாணந்துறை.



அங். இல: 5863

எம்.உமைர், லிமகஹகொடுவ, தஸ்கர்.


படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

பாடசாலை: ..............................

வகுப்பு: ..............................

திகதி: ..............................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம்



வானம் என்னும் திரையிலே - நீல
வண்ணம் அடித்தோர் யாரோ?
காணும் விழிகள் மகிழவே - அதில்
காட்சி வரைந்தோர் யாரோ?

நீல வண்ணத் திரையிலே - தினம்
நின்றழகு செய்திடும்
கோல வண்ண மணிகளை - அதில்
கொண்டு பதித்தோர் யாரோ?

பட்டுச் சேலை தன்னையே - நன்கு
பளபளக்கும் விதத்திலே
கட்டிவிட்டதாரோ? அந்தக்
கலைஞன் இறைவன் தானோ?

உ.யோர்த்திக்கா,
புனித அந்தோனியார் மகளிர் ம.வித்.,
கொழும்பு-03.

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவுக்கு 5,000 கி.மீற்றருக்கு அப்பால் இருக்கும் 'யகுட்ஸக்' என்ற நகரமே உலகில் கடுங்குளிர் நிலவும் நகரமாகும்.

# உலகின் கடுங்குளிர் நகரம்





எப்போதும் இங்கு குளிர் மைனஸ் 40 டிகிரி செல்சியசில் காணப்படும். இந்நகரத்தில் பனிப்பொழிவு தொடர்ந்து இடம்பெறும். அதிகளவாக குளிர் மைனஸ் 64 டிகிரி வரை நிலவியுள்ளது. 1632 ஆம் ஆண்டில்தான் இந்த பகுதி கண்டறியப்பட்டு பின்னர் நகரமாக்கப்பட்டது. தற்போது 270,000 மக்கள் இங்கு வசிக்கின்றனர்.

எம்.என்.ஹமாஸ்,
கல்கமுவ.

## உங்கள் அறிவுக்கு...


- ★ பிறப்பின்போது, சிசுவின் சராசரி நீளம் 50cm
- ★ மனித உடலின் மிக நீண்ட எலும்பு தொடை எலும்பு.
- ★ மனித உடலில் உள்ள நரம்புகளின் எண்ணிக்கை சுமார் 7,200 ஆகும்.
- ★ மனித உடலில் காணப்படும் மிகப்பெரிய உறுப்பு கல்லீரல்.
- ★ சராசரி மனிதனின் உடலில் இருக்கும் குருதியின் அளவு 5 லீற்றர் ஆகும்.

ஸபர் மஸுூத் சின்சார்,
நாங்கள்ள மு.ம.வித்., நாங்கள்ள.



# சொர்க்கத்தில் நரி

நரி ஒன்று தாகத்தால் அலைந்து தவித்தது. அதற்கு எங்குமே நீர் கிடைக்கவில்லை. தூரத்தில் கிணறு ஒன்று இருப்பதைக் கண்டு அது அக்கிணற்றின் அருகே சென்றது.



கிணற்றில், கயிற்றின் ஒரு முனையில் வாளி ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. அதைக்கண்ட நரி, வாளியில் தாவி ஏறி அமர்ந்தது. உடனே வாளி விர்ரெனக் கிணற்றின் உள்ளே சென்றது. நரியும் மகிழ்வுடன் அங்கு வயிறு நிறைய நீரை அருந்தியது. தாகம் தணிந்த பின்னர்தான் மேலே பார்த்தது. அட... 'எப்படி வெளியேறுவது' என்று யோசிக்கத் தொடங்கியது.

'மேலேயிருந்து யாராவது கயிற்றை இழுத்தால்தானே என்னால் மேலே போக முடியும். என்ன செய்வது?' நேரம் செல்லச் செல்ல நரிக்கு அச்சம் தோன்றியது. அந்த நேரம் பார்த்துக் கிணற்றின் அருகே ஓநாய் ஒன்று வந்தது. கிணற்றின் உள்ளே எட்டிப் பார்த்தது. அங்கு நரி இருப்பதைக் கண்டு "அடடா! நரியாரே உள்ளே என்ன செய்கிறீர்கள்?" எனக் கேட்டது. "நான் இப்போது சொர்க்கத்தில் இருக்கிறேன். என்ன அருமையான இடம் இது தெரியுமா? இங்கு மீன், கோழி, ஆடு எல்லாம் தருகிறார்கள்" என்றது நரி.

ஓநாய் சற்றும் யோசிக்காமல் கயிற்றின் மறுமுனையில் கட்டப்பட்டிருந்த வாளிக்குள் குதித்தது. அந்த வாளி 'சரசர' வென்று கிணற்றின் உள்ளே போயிற்று. அப்போது நரி அமர்ந்திருந்த வாளி மேலே வந்தது. நரி மேலே வரும் போது பாதி வழியில் ஓநாயைப் பார்த்தது. "நான் இப்போது சொர்க்கத்திற்கும் மேலான இடத்திற்குப் போகிறேன்" என்று கூறிக்கொண்டே மேலே சென்றது. மேலே வந்ததும் கிணற்றுச் சுவரின் மேலே தாவிக் குதித்துத் தப்பியோடியது. பாவம் ஓநாய் கிணற்றுக்குள்ளே விழுந்துவிட்டது.

## சிறப்புப் பொருள்

01. முத்தமிழ் - இயல், இசை, நாடகம்
02. மும்முரசு - வீரம், நியாயம், மானம்
03. முச்சங்கம் - முதல், இடை, கடை
04. மூவுலகம் - சுவர்க்கம், நரகம், பூமி
05. மூவிடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை
06. முச்சுடர் - சூரியன், சந்திரன், நெருப்பு
07. முத்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல்
08. முப்பால் - அறம், பொருள், இன்பம்
09. நாற்பயன் - அறம், பொருள், இன்பம், வீடு
10. ஐந்நிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
11. ஐம்பூதம் - நிலம், நீர், தீ, காற்று, வான்
12. ஐங்குரவர் - தாய், தந்தை, தமயன், அரசன், உபாத்தியாயர்

எம்.டீ.எப்.ஸஸ்னா,
கிரி/சுலைமானியா மு.வித்., குறீகொடுவ.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கீழுள்ள சொற்களை அருகிலுள்ள எழுத்துக் கூட்டத்திற்குள் இனங்கண்டு நிறந்தீட்டுக

LETTUCE, SPINACH, KALE, PEAS, CARROTS, PEPPER, CUCUMBER, TOMAATO, ONION, RADISH

1

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| F | T | M | L | G | V | K | D | O | L |
| K | C | A | R | R | O | T | S | X | P |
| V | A | I | Y | D | P | O | C | B | E |
| R | B | X | C | U | N | M | U | H | P |
| A | Z | Q | Z | A | E | A | C | R | P |
| D | K | O | L | E | T | T | U | C | E |
| I | G | N | K | K | L | O | M | Q | R |
| S | P | I | N | A | C | H | B | V | C |
| H | E | O | W | L | I | P | E | L | A |
| U | A | N | H | E | Z | R | R | S | T |
| T | S | C | E | B | Y | N | V | F | O |

2


## ஒவ்வொரு சொல்லையும் பொருத்தமான படத்துடன் இணைக்க

hamburger, lotus, propeller, rubik

nectarine, scorpion, grasshopper, wrestling

peeler, sunrise, calendar, cockatoo

iguana, caterpillar, toucan, vacation







'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 29.10.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 47
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=

பரிசுப் பொதி




நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.


3

## சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக



| | |
|---|---|
| 8 9 6 |
| 7 5 8 |
| 6 7 5 |
| 10 8 9 |
| 6 9 8 |

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 108



### மேலிருந்து கீழ்

01. நீரில் படர்ந்து வளரும் பூக்கும் தாவர வகை.
02. கரி-ஒத்தகருத்துச் சொல்.
03. பெரும்பாலான பழங்களுக்குள் இருக்கும். (தலைகீழ்)
05. பறக்க முடியாத பறவையினமொன்று.
06. சிரசு- ஒத்தகருத்துச் சொல்.
08. பிரமாண்டமான இல்லம்.
09. சபை/மன்றம் என்றும் அர்த்தப்படும்.
10. இறங்கு-எதிர்ப்பதம்.
11. மாமி-எதிர்ப்பாற் சொல்.

### இடமிருந்து வலம்

01. மரியாதை-எதிர்ப்பதம்.
03. 'செயல்' என்றும் பொருள்படும். (மாறியுள்ளது)
04. கடிதம் - ஒத்தகருத்துச் சொல்.
07. விற்பனைக்குள்ள பொருளுக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பது.
10. ஏமாற்றமடைபவர்.
12. ஐவகை நிலங்களில் ஒன்று.
13. 'பிரதியுபகாரம்' என்றும் அர்த்தப்படுத்தலாம். (மாறியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி இல.107 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மு | லை | யூ | ட் | டி | ■ |
| னை | ■ | ■ | ■ | ண் | 2 நா |
| ■ | 3 ஏ | ■ | ■ | 4 க | ரை |
| 5 கொ | ழு | ம் | 6 பு | ■ | ■ |
| த் | ■ | ■ | ழு | ■ | 7 ஆ |
| 8 து | லா | ■ | 9 தி | ரு | டி |


## நடராஜ் அறிவுக்கு விருந்து - 45 விடைகள்

போட்டி: 01

| | | |
|---|---|---|
| 8 9 10 | 6 7 8 | 3 4 5 |
| 4 5 6 | 2 3 4 | 5 6 7 |
| 1 2 3 | 7 8 9 | 0 1 2 |

| | | | |
|---|---|---|---|
| 2<9 | 2=2 | 6<7 | 4<8 |
| 6>5 | 8=8 | 3>2 | 1<2 |
| 3=3 | 1<7 | 4=4 | 9>8 |
| 4>2 | 6<9 | 3>1 | 5>2 |

போட்டி: 02



## நடராஜ் அறிவுக்கு விருந்து - 45 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
*எம்.இஹ்லாஸ், குறிஞ்சாங்கேணி-01.*

**2ஆம் பரிசு**
*ஜி.பவிஷாந்த், பவ்வாகம.*

**3ஆம் பரிசு**
*ரிக்ஸா ரியாஸ், ஹொரேதுடுவ.*

**பாராட்டுப் பெறுவோர்:**

- கு.ரம்சிகா, கரவெட்டி.
- எஃப்.சிம்ஸா, மீயெல்ல.
- எம்.அக்ரம், பட்டாணிச்சூர்.
- ஏ.உமேஷ்கர், இறத்தோட்டை.
- எஸ்.ஜானுகா, இறக்குவானை.
- எஸ்.இருஷான், பொல்கஹவளை.
- எம்.ஸாபீர், பெனிதுடுமுல்ல.
- எம்.உமைர், கெடகும்புர.
- கொ.கேஷைதன், சாம்பல்தீவு.
- மாஷிதா ரிஸ்வி, பேருவுளை.


Sponsored by

NATARAJ

Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

கல்முனை மாநகர சபையின் உறுப்பினர் ஏ.ஆர்.அமீர் அவர்களின் முயற்சியினால் பெரிய நீலாவணை அக்பர் வித்தியாலயத்துக்கு திண்மக் கழிவகற்றல் தொட்டி ஒன்றை பாடசாலையின் அதிபர் எ.எம்.ஜிப்ரி அவர்களிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

*(படமும் தகவலும்: மருதமுனை றாசிக் நபாயிஸ்)*



பாணந்துறை வத்தல்பொலையைச் சேர்ந்த நிஹ்மான்-ரில்வானா தம்பதியரின் செல்வப் புதல்வன் அஹமத் அபீப், தனது இரண்டாவது பிறந்தநாளை 22.10.2014 ஆகிய இன்று கொண்டாடுகிறார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று சகல வளங்களுடனும் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: ஆயிஷா)




இப்பாகமுவ, கும்பலங்கவை சேர்ந்த அப்துல் ரசாக்-ஜெஸ்மினா தம்பதியரின் செல்வப் புதல்வி பாதிமா அஸ்மா, தனது ஐந்தாவது பிறந்தநாளை 22.10.2014 ஆகிய இன்று கொண்டாடுகின்றார். இவரை குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: ஐ.கே.துல்பியா)



திருகோணமலை பாலையூற்றைச் சேர்ந்த சுரேஸ்காந்-ரஜனி தம்பதியரின் செல்வப் புதல்வி வேனிலக்ஷனா, தனது முதலாவது பிறந்தநாளை 23.10.2014 அன்று விமர்சையாக கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்ற பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள். (தகவல்: நஸீமா)



எஸ்.அப்றோஸ்,
மன்/சென். மேரிஸ் பெ.வித்.,
பேசாலை.




எம்.அன்பாஸ்,
அல்-ஹிக்மா மு.பி.எஸ்.,
எஹலியகொடை.



வி.லக்ஷிகன்,
யா/யாழ். இந்து ஆரம்ப பாட.,
யாழ்ப்பாணம்.



ர.குருசாந்தன்,
கிளிநொச்சி ம.வித்., கிளிநொச்சி.



சூ.லியோ பிரன்குருஸ்,
மன்/முருங்கன் மகா வித்., முருங்கன்.


## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ரெ.தர்ஷனன்,
நோர்வூட் த.வித்., நோர்வூட்.



ஜெ.கருஷ்ணா,
கமு/கார்மேல் பற்றிமா தே.பாட.,
கல்முனை.




பெ.பவித்ரன்,
ஹைலன்ஸ் மத்திய கல்., ஹட்டன்.



ரெ.ரொம்சன்,
மன்/ஆண்டான்குளம்
றோ.க.த.பா., ஆண்டான்குளம்.



க.ஹஜீவன்,
இந்து தேசிய கல்., மாத்தளை.



ஜே.பாத்திமா சிபானா,
தெல்தெனிய மு.வித்.,
பலகொல்ல.



சாஹின் அக்பர்,
மு.ம.கல்., தெமட்டகொட.



சு.அஸ்றா,
மன்/சென். மேரிஸ் பெ.வித்.,
பேசாலை.




ஆர்.குமுதினி,
கூடவளை விக்னேஸ்வரா கல்.,
கிளிசுத்தேன.



பாத்திமா முஸம்மில்,
தெல்தெனிய மு.வித்.,
பலகொல்ல.

# தரைப்பகுதிக்குள் எவ்வளவு தூரம் செல்லலாம்?

## புதிய முயற்சியில் மனிதன்







பூமியின் மிக ஆழ்பகுதிக்குச் செல்லும் முயற்சியில் தற்போது மனிதன் ஈடுபட்டு வருகின்றான். விண்வெளித்துறையில் சாதனைகள் பல புரிந்த மனிதன் தனது சொந்தப் பூமியில் தரைக்கடியில் எவ்வளவு தூரம் சென்றுள்ளான்? என்ற கேள்விக்கு இதுவரை விடை காணாது தடுமாறியே வருகின்றான். ஆனால், இக்கேள்விக்குப் பதில் காண்பதற்கான செயற்றிட்டம் சுமார் 1 பில்லியன் டொலர்கள் செலவில் வெகு விரைவில் நடைபெறவுள்ளது.

அதாவது ஆழ் கடலுக்கு அடியில் சுமார் 6km தூரத்திற்கு நிலத்தைத் தோண்டி பூமியின் சூடான அடர்ந்த சிலிக்கேட் பாறைகளால் சூழப்பட்ட பகுதி (mantle) அதாவது பூமியின் மையத்துக்கும் மேலோட்டுக்கும் இடையில் (interior between the crust and the core) உள்ள பிரதேசத்துக்கு ஆய்வாளர்கள் செல்லவுள்ளனர்.

மேலும் அங்கு காணப்படும் பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முற்பட்ட சுவடுகளையும் பாறை, மண் மாதிரிகளையும் சேகரிக்கவுள்ளனர். இம்மாதிரிகள் மூலம் புவியின் தோற்றம் மற்றும் பரிணாமம் குறித்த மிகப் பெரிய சவாலான கேள்விகளுக்கு விடை காண முடியும் எனவும் அவர்கள் நம்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மனதில் இருந்து இன்னொரு மனதிற்கு தகவல் பரிமாற்றம்



வட கிழக்கு பிரான்ஸின் ஸ்ட்ராஸ்பர்க் பல்கலைக்கழகத்தின் அதி நவீன ஆய்வுகூடத்தின் உள்ளே இரு கண்கள் கட்டப்பட்ட நிலையிலும் காதுகள் மூடப்பட்ட நிலையிலும் இருந்தார் கலாநிதி மைக்கல் பேர்க்.

இந்த அபூர்வ ஆய்வுடன் தொடர்புடைய மற்றைய ஆய்வுகூடம், அவ்விடத்திலிருந்து சுமார் 5,000 மைல்களுக்கு அப்பால் இந்தியாவின் கேரளாவில் அமைந்திருந்தது. அங்கும் கண்கள் கட்டப்பட்ட நிலையிலும் காதுகள் மூடப்பட்ட நிலையிலும் ஸ்பானிய இளம் விஞ்ஞானி ஒருவர் காணப்பட்டார். அவர்தான் கலாநிதி எலிஜன்ட்ரோ யேரா ஆவார்.

இந்த அபூர்வமான ஆய்வு நடவடிக்கை, கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. மிகவும் ரகசியமாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின்மூலம் உறுதிசெய்யப்பட்ட விடயங்கள் அண்மையில் வெளியிடப்பட்டன. அந்த ஆய்வின்படி, கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி ஒரே நேரத்தில் உலகின் இரண்டு பகுதிகளில் ஒரே விதமாக தங்களைத் தயார்படுத்திக்கொண்ட இரு விஞ்ஞானிகளும் எந்தவொரு தொடர்பாடல் கருவியையும் பயன்படுத்தாமல், தமது மனங்களின்மூலம் தகவல்கள் இரண்டைப் பரிமாறிக்கொண்டனர்.

## விஞ்ஞான ரீதியிலான முதலாவது ஆய்வு

இது போன்ற விடயங்கள் பற்றி நாம் விஞ்ஞான புனைகதைகளினூடாகத்தான் இதற்கு முன்னர் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்தியாவின் முனிவர்கள் மற்றும் சித்தர்கள் போன்று மனதை ஒருநிலைப்படுத்துவோர்களாலேயே இவ்வாறான விடயங்கள் சாத்தியமாகின்றன என நாம் கேள்விப்பட்டிருப்போம். ஏனெனில், மனதிற்கு மனது தகவல்களை அனுப்பும் முறை பற்றி நவீன விஞ்ஞானத்தில் இதுவரை உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆக, இதுதான் விஞ்ஞான ரீதியில் உறுதிசெய்யக்கூடியவாறு மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தொடர்பாடல் கருவிகள் எதனையும் பயன்படுத்தாமல்,ஏற்கனவே திட்டமிடப்படாத இலகுவான இரு தகவல்களை இந்த ஆய்வின் போது இருவருக்கிடையிலும் பரிமாறிக்கொள்வதே இந்த ஆய்வுடன் தொடர்புபட்டவர்களின் நோக்கமாக இருந்தது.

## விஞ்ஞான ரீதியிலான தகவல் பரிமாற்றம்


ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு தொழில்நுட்ப தொடர்பாடலை மேற்கொள்வது போன்று, ஒரு மனதிலிருந்து இன்னுமொரு மனதிற்கு தகவல்களை அனுப்புவதே இவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது. இதனையே 'டெலிபதி' (telepathy) என நாம் அழைக்கின்றோம். அதாவது, பேச்சு ஒலி இன்றி மனதினால் கருத்தறிவித்தல் என்று இதனைக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும், இந்த ஆய்வு வெற்றியளிக்கும் வரை ஒரு மனதிலிருந்து மற்றுமொரு மனதிற்கு தகவல் பரிமாற்றம் செய்யும் இந்த ஆய்வு பற்றிய விபரங்கள் ரகசியமாகவே பேணப்பட்டு வந்தன. ஆய்வு நிறைவடைந்ததை அடுத்து, அது தொடர்பான விஞ்ஞான ரீதியிலான அறிக்கை, ஏனைய விஞ்ஞானிகளினால் பரீட்சித்துப் பார்க்கப்பட்ட பின்னரே, சர்வதேச வலைப் பின்னலூடாக தகவல்கள் வெளியிடப்பட்டன. (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் சாரணர் உலகம்



# சாரண முகாம் அமைக்கையில் சத்துணவில் கவனம் தேவை...!

சாரணர் முகாம் அமைக்கச் செல்கின்றவர்கள் உடல் ஆரோக்கியத்துடனும், உடல் பலத்துடனும் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். நல்ல போஷாக்கான நிறையுணவை உண்ணுவதன்மூலமே இவற்றை நீங்கள் அடைய முடியும். முகாம் அமைக்கச் செல்கின்ற உங்களில் எத்தனைபேர் உட்கொள்கின்ற உணவைப் பற்றி அக்கறை கொண்டுள்ளீர்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நீங்கள் 11-18 வயதிற்கு இடைப்பட்டவர்களாயின், உங்களை இளவயதினர் என்ற வட்டத்திற்குள் அடக்கலாம். எனவே, இந்த வயதில் போதிய உணவுப் பழக்கங்களை கைகொள்ள வேண்டியது அவசியமாகும். காலநிலை மாற்றங்கள்கூட உடல் சக்தியில் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவை.

எனவே, காலநிலை மாற்றத்திற்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய உடல் சக்திக்குத் தேவையான உணவுக்கூறுகள் வருமாறு;

1. காபோஹைதரேற்று
2. புரதம்
3. கொழுப்பு
4. விற்றமின்கள்
5. கனியுப்புக்கள்

இவை மூலமாக தமது உடம்பிற்கு முக்கியமான நன்மைகள் கிடைக்கின்றன. அவை,

* காபோஹைதரேற்று, கொழுப்பு மூலம் உடல் சக்தி
* விற்றமின், கனியுப்புக்கள் மூலம் உடல் பாதுகாப்பு (ஆரோக்கியம்)

மேற்கூறப்பட்ட 5 வகையான உணவுக் கூறுகளில் அடங்குகின்ற உணவு வகைகள் எவை என்பதைப் பார்ப்போம்.

* காபோஹைதரேற்று - மா, சீனி
* கொழுப்பு - எண்ணெய்
* புரதம் - இறைச்சி, உலர்தானியங்கள்
* விற்றமின் - மரக்கறி, பழவகைகள்
* கனியுப்புக்கள் - இறைச்சி, கீரைவகைகள்

## நிறையுணவு அற்ற உணவாக இருப்பின்...

முகாம் அமைக்கையில் உட்கொள்கின்ற உணவானது, நிறை உணவற்ற உணவாக இருந்தால் அது உங்களை எவ்வாறு பாதிக்கும்? அவ்வாறாயின் பின்வரும் தாக்கங்களுக்கு நீங்கள் உள்ளாவீர்கள்.


* சக்தியை இழந்து சவால்களை முறியடிக்க முடியாதவர்களாகவும், இலக்குகளை அடைய முடியாதவர்களாகவும் இருந்துவிடுவீர்கள்.
* தலைசுற்றல் (மயக்கம்)
* உடல் வலி
* தூக்கக் கலக்கம்
* சோம்பல்
* எலும்பு நோய்கள்

இவை மட்டுமல்ல, முகாம் அமைப்பை முடித்துவிட்டு வீட்டிற்குச் செல்கையில் நீங்கள் மிகவும் களைப்புற்றிருப்பவராகவும் இருப்பீர்கள். இதனால், முகாம் அமைப்பில் கிடைக்கப்பெறவேண்டிய இனிய அனுபவங்கள் இல்லாமல் போய்விடும். இவற்றிற்குக் காரணம் உங்களது நிறையுணவற்ற உணவுப் பழக்கமேயாகும். ஆகவே! இவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள். எப்போதும் சத்துள்ள உணவுகளை உண்ணப் பழகிக்கொள்ளுங்கள். இதன்மூலம் மனதாலும், உடலாலும் திடம் கொண்ட சாரணனாக நீங்கள் உருவெடுக்கலாம்.



இவ்வாறு உடல் ஆரோக்கியத்திற்கு உதவக்கூடிய உணவு வகைகளை உட்கொள்வதன் மூலமாக, முகாம் அமைக்கும் சாரணர்கள், வெற்றிகரமாக தமது முகாம் அமைப்பை மேற்கொள்ள முடியும்.


# செய்து பாருங்கள்



குருளைச் சாரணர்கள் செய்து பார்க்கக்கூடிய சில கைப்பணிப் பொருட்கள் இவை. பாவிக்க முடியாத இலத்திரனியல் பொருட்களைக் கொண்டு இவ்வாறு சிறிய உருவங்களை செய்துகொள்ளமுடியும். இவை உங்கள் கற்பனைத்திறனை மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்தி நிற்கும்.

## சாரண முகாமில் அமைக்கும் ராக்கைகள்

சாரண முகாம் அமைக்கையில் அவ்விடத்திலேயே அமைத்துக்கொள்ளக்கூடிய சில உபகரண தாங்கிகள் இவை. இவற்றை நீங்களே செய்துகொள்ளலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலியா

இந்து மகா சமுத்திரத்தின் கரையில் அமைந்துள்ள சோமாலியா நாடு கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சுல்தான்களின் ஆட்சியின்கீழ் வந்தது. அதன்பின் 1884 இல் சோமாலியாவின் ஒரு பகுதி பிரித்தானியாவினதும் 1889 இல் மற்றொரு பகுதி இத்தாலியினதும் ஆட்சியின்கீழ் வந்தன. 1960 இல் இவ்விரு பகுதியும் ஐக்கியப்பட்டு காலனித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்று, இன்றுவரை ஒரே நாடாகத் திகழ்கின்றது. எனினும், அந்நாட்டில் ஏற்பட்ட மோதல்களின் காரணமாக பல சந்தர்ப்பங்களில் சோமாலியாவில் அரசியல் ஸ்திரமற்ற நிலை உருவாகியது. அங்கு 1979 இல் இரண்டாவது அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. நடப்பு அரசியலானது, 2012 ஆம் ஆண்டு முதல் அமுலில் இருந்து வருகின்றது.

1960 இல் சோமாலியாவின் சுதந்திர வெற்றியின் அடையாளச் சின்னம்.

## தேசிய மிருகம்



புலி அந்நாட்டின் தேசிய மிருகமாகும். சோமாலியாவில் தேசிய பறவை மற்றும் தேசிய மலர் குறித்த தெளிவான குறிப்புகள் எதுவும் இல்லை.

## இனங்கள்




## மொழி

சோமாலி (உத்தியோகபூர்வ மொழி)
அரபு (உத்தியோகபூர்வ மொழி)
இத்தாலி, ஆங்கிலம்

## சமயம்

சுன்னி முஸ்லிம்

வெறும் வாய்மொழியில் பேசும் மொழியாக மாத்திரம் இருந்த சோமாலி மொழியானது, 1973 ஆம் ஆண்டின் பின்னர் எழுத்து மொழியாகவும் பரிணமித்தது.

## அரசியல்



சோமாலிய ஜனாதிபதி ஹஸன் ஷெய்க் மொஹமுத்

சோமாலியாவின் நாடாளுமன்றக் கட்டடம்

## சோமாலியாவின் இயற்கை வளம்

யுரேனியம், இரும்புத்தாது, ஜிப்சம், செம்பு, பொக்சைட், இயற்கை வாயு மற்றும் கனிய எண்ணெய் வளம் இருப்பதாகவும் நம்பப்படுகின்றது.



சோமாலியாவின் பாரம்பரிய உடை ஆண் மற்றும் பெண்.



நவீன கற்காலத்திற்குரிய குகை ஓவியங்களை வட சோமாலியாவில் காணக்கூடியதாக உள்ளது.




சோமாலிய தேசிய கொடி

நிலப்பரப்பு கி.மீற்றர்

627,337 km²

சனத்தொகை

10,251,568

சோமாலிய ஷிலின் அந்நாட்டின் நாணயமாகும். ஏனைய நாணயங்களோடு ஒப்பிடும்பொழுது அது பெறுமதி குறைந்ததாகும்.



அந்நாட்டின் பாரம்பரிய நடனக்கலையின் ஓர் அங்கம்.



மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் விவசாயப் பெரும்போக பயிர்ச்செய்கை என்பன அந்நாட்டின் முக்கிய வருவாய்த்துறை ஆகும்.




2014 ஆம் ஆண்டு தொடக்கம் சோமாலியாவில் எண்ணெய் வளத்தை அகழ்த்தெடுப்பதற்காக பிரித்தானிய மற்றும் கெனடிய நிறுவனங்கள் முன்வந்துள்ளன.



சுகாதார வசதிகளும் கல்வியும் அந்நாட்டில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன.



## தலைநகரமும் பெரிய நகரமும்



சோமாலியாவில் 'ஷரியா' சட்டம் நடைமுறையில் உள்ளது.



அல்ஷபாப் தீவிரவாதிகள் அந்நாட்டில் மோதல் நிலையை உருவாக்கியுள்ளனர்.

மோதல்களுக்குள் சிக்கியுள்ள சோமாலிய குழந்தைகளுள் அதிகமானோர் மந்தபோசனத்தால் அவதியுறுகின்றனர்.



சோமாலிய கடற்கொள்ளையர்கள் உலக பொருளாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக திகழ்கின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்கறிகள், பழங்களை உண்பவர்களின் ஆயுள் அதிகம்!



அசைவ உணவுகளை உட்கொள்பவர்களைவிட, காய்கறிகளையும் பழங்களையும் தமது உணவில் அதிகம் சேர்த்துக்கொள்பவர்களின் ஆயுட்காலம் அதிகம் என அண்மையில் ஐக்கிய அமெரிக்காவின் கெலிஃபோர்னியா பல்கலைக்கழக ஆய்வுக்குழுவொன்று மேற்கொண்ட ஆய்வுகளின்மூலம் தெரியவந்துள்ளது. காய்கறிகள் மற்றும் பழங்கள் அடங்கிய உணவுகளை மட்டும் தமது மூவேளை உணவுகளாக சேர்த்துக் கொள்பவர்களின் மரண வீதமானது, ஏனையோரைவிட 12 சதவீதத்தால் குறைவாக இருப்பதாக இந்த ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. சுமார் 70,000 பேரை உட்படுத்தி, 6 வருடகால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடுத்தே இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன.





### அதிக நலன்கள்

இதேவேளை, காய்கறிகளை மட்டும் உணவாக உட்கொண்டதன் பயனாக அதிக நலன்களை அடைந்தவர்கள் ஆண்களே என்றும் ஆண்களுக்கு ஏற்படும் இதயம் சம்பந்தப்பட்ட நோய்களைக் கட்டுப்படுத்துவதில் காய்கறிகள் பெரும் பங்காற்றுகின்றன என்றும் இந்த ஆய்வுகளில் பங்கேற்ற ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், காய்கறிகள், பழங்கள் மற்றும் தானிய வகைகளை முறையாக தமது நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்வதால், இரத்த அழுத்தத்தை குறைந்த மட்டத்தில் வைத்துக்கொள்ளக் கூடியதாக இருப்பதோடு, உடலில் சேரும் கொழுப்பின் அளவையும் சீரான மட்டத்தில் வைத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அத்துடன், நீரிழிவு மற்றும் இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுவதைக் குறைத்துக்கொள்ளலாம் என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


மேலும் காய்கறிகள் மற்றும் பழங்களை மட்டும் உணவாகக் கொள்பவர்கள் ஏனையவர்களை விட அறிவு மட்டத்திலும் மிகவும் உயர்நிலையில் காணப்படுகின்றனர் என்பதும் இதன்போது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, காய்கறிகள் மற்றும் பழங்களை எமது உணவுகளில் அதிகம் சேர்த்துக்கொள்வதானது, ஆரோக்கிய வாழ்வுக்கு சிறந்தது என்பது இதன்மூலம் தெளிவாகின்றது. (-ஸ்ரீ)



# 120 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட புதைபடிமம் கண்டுபிடிப்பு

'டெரோசர்' என்பது பறக்கக்கூடியதும் ஊர்வன வகையைச் சார்ந்ததுமான ஓர் உயிரினமாகும். அண்மையில், தென்கிழக்கு சீனாவின் லியோனின் மாநிலத்திற்குட்பட்ட ஹலேலுஜாஹ் என்ற மலைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது, இந்த உயிரின வகையைச் சார்ந்த இரு பறவைகளின் புதைபடிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை இற்றைக்கு 120 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட புதைபடிமங்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இந்த உயிரினம் இற்றைக்கு 228 முதல் 66 மில்லியன்




வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் (ஆரம்ப க்ரீடேசிய யுகம்) புவியில் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது. இந்த உயிரினம் 2.3 அடி நீளமானது. அவற்றின் இறக்கைகளுக்கிடையிலான இடைவெளி 4.9 அடியாகும். இந்த 'டெரோசர்' பறவையினத்தின் தலைப்பகுதியானது, Avatar திரைப்படத்தில் வந்த ஊர்ந்து செல்லும் பறவையினத்தின் தலைப்பகுதியை ஒத்ததாக இருக்கின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனவே, இந்த புதைபடிமங்களுக்குரிய பறவையினத்திற்கு 'Ikrandraco avatar' என பெயரிடப்பட்டுள்ளது.

# இவ்வார கார்ட்டூன் படம்





இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 22, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org